பக்கங்கள்: 15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 25 புதன்கிழமை 07.04.2021 கதிர் 153

இனிது ரகசியம் அல்ல!

இலங்கையில் அரசியல் இல்லாத பொது நிகழ்வுகளே இல்லை எனலாம். சில சமயங்களிலே பொது நிகழ்வே அரசியலாகி விடும். அப்படிப்பட்ட ஒரு சம்பவம் குறித்த சில உள்தகவல்களை இன்று வாசகர்களுடன் பகிரலாம் என நினைக்கிறேன். பக்கம்02



# ஆளுமைமிக்க பெருமகனாரை இழந்து நிற்கின்றது தமிழினம்!

## சிவஞானசோதியின் மறைவுக்கு சம்பந்தன் இரங்கல்



நீண்ட அனுபவமும் நிர்வாக ஆளுமையும் மிக்க பெருமகனார் வே.சிவஞானசோதியை தமிழ்ச் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது. இது ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் பெரும் இழப்பாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் வே.சிவஞானசோதியின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான சிவஞானசோதி இலங்கை நிர்வாக சேவையில் நீண்டகால அனுபவம் மிக்கவர். அவர் பல அமைச்சுகளில் செயலாளராகக் கடமையாற்றியிருந்தார். ☞2

# இறுதிப்போரில் தமிழர்கள் சாகடிக்கப்பட்டபோது பேராயர் மல்கம் ரஞ்சித் மௌனம் காத்தமை ஏன்?

## நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. கேள்வி



இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொதுமக்கள், குழந்தைகள் குறித்து நீதி விசாரணை வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்படாதது ஏன்?

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார். ☞2

# அரசியலில் குதிப்பாரா அழகி புஷ்பிகா சில்வா?



அரசியலுக்கு வரும் எண்ணம் தற்போது இல்லை. அது தொடர்பில் எதிர்காலத்தில் சிந்திக்கலாம். விருப்பம் இல்லை என ஒரேடியாக கூறிவிடவும் முடியாது.

– இவ்வாறு 'திருமதி இலங்கை அழகி'ப் போட்டியில் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்ட புஷ்பிகா டி சில்வா ☞11

# மரியசேவியர் அடிகளாரின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்



யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பூதவுடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

கலை இலக்கியத்துறையில் கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துக் காலமான யாழ்ப்பாணம் திருமறைக் ☞2

# யாழ்ப்பாணத்தில் மேலும் 21 பேருக்குக் கொரோனா

## பருத்தித்துறை வைத்தியசாலையில் நால்வருக்குத் தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 21 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என வடக்கு மாகாண ☞2

# ஆட்சியைத் தீர்மானிக்கும் வல்லமை என்னிடம் உண்டு

## விமல் அதிரடிக் கருத்து



இலங்கையின் அரசியலையும் ஆட்சியையும் தீர்மானிக்கும் சக்தி என்னிடம் உண்டு. இரண்டு பிரதான தேர்தல்களின் போது அதனை நான் நிரூபித்துள்ளேன். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய ☞2

# பிரிட்டன் தூதுவருடன் ரெலோ நேற்று சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பிரதிநிதிகள், இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹமில்டனை ☞11



பாம் எண்ணெய் இறக்குமதி தடை:

# இலங்கை அரசு மீது மலேசியா அதிருப்தி

பாம் எண்ணெய் இறக்குமதிகளை நிறுத்தும் இலங்கை அரசின் முடிவு தமது நாட்டின் எண்ணெய் பனைத் தொழிலில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என மலேசியாவின் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ☞11

இணைய வழித் தமிழ் வகுப்புக்கள்

25 வருட காலக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தரம் 06 முதல் 11 வரையான மாணவர்களுக்குத் தமிழ் வகுப்புகள்.
ZOOM செயலி ஊடாக இணைந்து கொள்ள
(076) 454 5709 ஐ அழையுங்கள் !
மாதாந்தக் கட்டணம் 400/= மட்டுமே!

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல வீடுகளில் – குடும்பங்களில் – திருமதி களினால்தான் சிக்கல். (இப்படிக் கூறுவ தால் பல அம்மணிகள் என் மேல் பாயத் தயாராவார்கள். அவர்களிடம் மன்னிப் புக் கோருகிறேன்.)

திருமதிகளினால் பிரச்சினை என்றால், 'இலங்கைத் திருமதி அழகி'க்கான போட்டி யிலும் பிரச்சினை.

நடுவர்களால் வெற்றி பெற்றவர் என்று அறிவிக்கப்பட்ட 'திருமதி அழகி ராணி யின்' தங்கக் கீரிடம் திடுதிப்பென மேடை யில் வைத்து பிடுங்கப்பட்டு இன்னொரு வருக்கு அணிவிக்கப்பட்டதால் எழுந்த சர்ச்சை பலருக்கும் தெரிந்ததுதான். எனினும் சில உள்வீட்டு விடயங்கள் அதில் பொதிந்திருப்பதால் நடந்தவற்றையும், விளைவுகளையும் சுருக்கமாகக் குறிப் பிடலாம் என நினைக்கிறேன்.

கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தாமரைத் தடாகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உலகத் 'திருமதி அழகி ராணி' தெரிவுப் போட்டியில் பங்குபற்றுவதற்கான இலங் கைத் 'திருமதி அழகு ராணி'யைத் தேர்ந் தெடுப்பதற்கான நிகழ்வு இது.

இலங்கையில் இருந்து திருமதி அழ கிராணியாகத் தெரிவு செய்யப்பட்ட இருவர் பின்னர் 'உலகத் திருமதி அழகி ராணி'யா கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் – தற்போதைய கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்கா. அவர் 1984இல் இலங்கை மற்றும் உலக திருமதி அழகி ராணி கீரிடங்களை வென்றவர்.

அடுத்தவர் 2019 இல் இலங்கை திரு மதி அழகி ராணியாகத் தெரிவாகி, தற் போது உலக திருமதி அழகிராணி கிரீடத் தைத் தம் வசம் வைத்திருக்கும் கரோலின் ஜுரி. கடந்த ஞாயிறு குழப்பத்தின் சூத்திர தாரி இவர்தான்.

போட்டி நடைபெற்று முடிவடையும் போது, 2021 இற்கான இலங்கைத் திரு மதி அழகி ராணியாக புஷ்பிக்கா டி சில்வா அறிவிக்கப்பட்டார். 2011 இல் 'இலங்கை அழகு ராணி'யாக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டவர். திருமணத்துக்கு முன்னர் அப் போது அவர் பெயர் புஷ்பிக்கா சந்தமல்லி. பின்னர் இலங்கையின் மொடல் அழ கியும் கூட.

அவருக்கான தங்கக் கீரிடத்தை பிரத மரின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, முன் னாள் திருமதி உலக ராணியும், கொழும்பு மேயருமான ரோஸி சேனநாயக்கா ஆகி யோருடன் மற்றொருவரும் சேர்ந்து அணி வித்தனர்.

அதன் பின்னர் புதிய இலங்கைத் 'திருமதி அழகி ராணி'யாக புஷ்பிக்கா மேடையில் வெற்றி வலம் வரும் போது, அதுவரை இலங்கைத் திருமதி அழகி ராணியாக இருந்தவரும் தற்போது 'உலகத் திருமதி அழகி ராணி'யாக இருப்பவரு மான கரோலின் ஜுரி புயல் என மேடை யில் பாய்ந்தார். அவர் ஏற்கனவே இந்தத் தெரிவு தொடர்பான பல சுற்றுப் போட்டி களில் நடுவராகப் பங்குபற்றியிருந்தவர். புஷ்பிகா டி சில்வா முதல் சுற்றுகளில் தேர்வாகி அடுத்த கட்டங்களுக்குப் போன மைக்கு காரணமாக அமைந்த நடுவர் இவர்.

"மணவிலக்குப் பெற்றவர்கள் இந்தப் போட்டியில் தகுதி நீக்கப்பட வேண்டியவர் கள்" – என்று அறிவித்த கரோலின் ஜுரி, புஷ்பிக்காவுக்கு அணிவிக்கப்பட்ட கிரீடத் தைப் பிடுங்கினார். அதனால் புஷ்பிக்கா தலையில் காயமடைந்தார் எனக் கூறப் படுகின்றது. அந்தக் கிரீடத்தை அப்போட் டியில் இரண்டாவதாக வந்த திருமதி அயோஷா பஸநாயக்காவுக்கு அணிவித்து பெரும் களேபரத்தை ஏற்படுத்தினார்.

இந்தக் குழப்பத்துடன் நிகழ்வு முடிவ டைந்தது. கரோலின் ஜுரியின் நடவடிக்கை, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களினால் மட்டும் அல்லாமல், அவரை உலகத் திருமதி அழகி ராணியாகத் தேர்வு செய்த சர்வ தேச நிறுவனத்தினாலும் கடும் கண்டனத் துக்கு உள்ளாகியுள்ளது.

திருமணம் செய்து திருமதியான புஷ் பிக்கா தமது கணவருடன் சேர்ந்து வாழ வில்லை என்பது உண்மைதான். பிரிந்து தான் வாழ்கின்றார். மண விலக்குக் கோரும் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவை யில் உள்ளது. ஆனால் அவர் இன்னும் சட்ட ரீதியாக மணவிலக்குப் பெற்றவர் அல்லர். எனவே அந்தக் காரணத்தைக் காட்டி அவரின் கிரீடம் பறிக்கப்பட்டமை தவறு என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிரீடமும் அவருக்குத் தி ருப்ப அளிக்கப்பட்டு விட்டது. ஆனால் விடயம் அதுவல்ல.

இந்தச் சம்பவத்தினால் ஒரே நாளில் தென்னிலங்கை மக்களினால் அதிகம் கழிவிரக்கத்துடன் பார்க்கப்பட்டார் புஷ் பிக்கா. மக்களின் ஆதரவும், பரிவும், கரிச னையும் அவர் பக்கம் ஒரே நாளில் திரும்பி விட்டன.

ஏற்கனவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ – திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோ ருடன் மிக நெருக்கமான தொடர்பைப் பேணிய புஷ்பிக்காவை ஒரே நாளில் மக் களின் பெரும் பரிவுக்கு உள்ளாக்கிய இந்த சம்பவத்தை அடுத்து அவரை அர சியலுக்கு சரியாகப் பயன்படுத்த சம்பந் தப்பட்ட வட்டாரங்கள் தீர்மானித்து விட் டனவாம். ரோஸி சேனநாயக்காவைப் போல இவரைக் களத்தில் இறக்கும் தீர்மா னம் அப்போதே எடுக்கப்பட்டு விட்டது.

இதனால், பாதிக்கப்படப் போகின்றவர் சு.கவின் தலைவரும் முன்னாள் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறிசேனதான். ஏன், எப்படி என்று கேட்கின்றீர்களா?

புஷ்பிக்காவும் பொலன்னறுவையைச் சேர்ந்தவர்தான். அந்த மாவட்டத்தில் சு. கவின் தலைவர் மைத்திரிக்கு நிகரான மாற்றுத் தலைமை ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த பொதுஜன பெரமுனவுக்கு ஆளுமையுள்ள அம்மணி ஒருவர் அரு மையாகக் கிடைத்திருக்கின்றார். அவரை வைத்துக் கொண்டு பொலன்னறுவை யில் மைத்திரியாரை ஓரம் கட்டும் முயற்சி இனி கனகச்சிதமாக அரங்கேறும் என எதிர்பார்க்கலாம்.

இந்த இலங்கைத் 'திருமதி அழகி ராணி' போட்டியில் பாதிப்புற்ற இன்னொரு அரசியல் தரப்பும் உள்ளது. அது பற்றிய விடயமும் பலருக்குத் தெரியாது.

ஞாயிறு நடந்த போட்டியில் முதலில் இரண்டாவதாக வந்தவர் என அறிவிக்கப் பட்டு, பின்னர் கரோலின் ஜுரியினால் பட்டம் வென்றவர் என்று கீரிடம் சூட்டப்பட்டு, அதன் பின்பு மீண்டும் கீரிடத்தை இழந்து இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்ட அயோஷா பஸநாயக்கா யார் தெரியுமா?

பொதுஜன பெரமுனவின் முன்னாள் இளம் எம்.பியான தரனாத் பஸநாயக்கா வின் மனைவி. இப்போது 42 வயதுடைய தரனாத் பஸநாயக்கா 2010 முதல் 2020 வரை குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித் துவப்படுத்தியவர். ராஜபக்ஷக்களுக்கு – குறிப்பாக நாமல் ராஜபக்ஷவுக்கு – மிக வும் நெருக்கமானவர். நடந்து முடிந்த சம்பவங்கள் நிச்சயம் அவரது மனதை நெருடியிருக்கும். இந்தத் தடவை பொதுத் தேர்தலில் எம்.பியாக முடியாமல் போன அவரை, மீண்டும் அதே குருநாகல் மாவட்டத்தில் இருந்து அதிக விருப்பு வாக் குகளுடன் நாடாளுமன்றுக்குத் தெரிவான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரவணைத் துச் சமாளிப்பார் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

## ஆட்சியைத் தீர்மானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரி வித்தார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான அணிக்கு எதிராக ஆளும் கட்சிக்குள்ளி ருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவரது கட்சி ஆளும் கட்சியிலிருந்து வெளியேற வுள்ளது எனத் தெரிவிக்கப்படும் கருத்துக் கள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர் தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியைத் தழுவினார். அவர் கொழும்பிலிருந்து சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்குச் சென்றார். அவர் அங்கு முடங்கியிருக்க வேண்டும் எனச் சிலர் விரும்பினார். ஆனால், அவரை அங்கிருந்து கொழும்பு – நுகேகொடவுக்கு அழைத்து வந்து மாபெரும் மக்கள் பேரணியை நடத்திக் காட்டினேன். மீண்டும் அவர் தலைமையி லான அரசை நிறுவுவதில் பெரும் பங்கு வகித்தவன் நான்.

அதேவேளை, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நியமிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் சச்சரவுகள் எழுந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷவையே நியமிக்கவேண்டும் என்று உறுதியாக நின்று அவரைத் தேர்தல் களத்தில் வெற்றியடையச் செய்ததிலும் எனக்கு மிக முக்கிய பங்குண்டு. அந்தவகையில்தான் இலங்கையின் அரசியலையும், ஆட்சி யையும் தீர்மானிக்கின்ற சக்தி எனது தலை மையிலான கட்சியிடம் இருக்கின்றது என்பதை வெளிப்படையாகக் கூறுகின் றேன். இதை ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் மறக்கமாட்டார்கள்.

தேசிய சுதந்திர முன்னணி ஆளும் கட்சியில் பிரதான பங்காளிக் கட்சி. எமது கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேரப் போகின்றது எனவும், நாம் எதிர்க்கட்சியுடன் கைகோர்க்கப் போகின்றோம் என்றும் அரசுக்குள் இருக்கும் ஒரு சில அணியினர் கூறி வருகின்றனர். மாகாண சபைத் தேர்தலையொட்டி அரசியல் களத்தில் இவ் வாறு வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வருவது வழமை. அரசுக்குள் இருக்கும் ஒரு சக்தி யினர் என் மீதும் என் கட்சி மீதும் சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அரசி லிருந்து வெளியேறும் தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை. அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின் றோம் – என்றார்.

## ஆளுமை மிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, வடக் குச் செயலணி, நல்லிணக்க அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார்.

இறுதியாக இவர் பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலா ளராகவும் கடமையாற்றியவர்.

அனைவருடனும் சகஜமாகப் பழகும் அவர், தனக்குக் கிடைத்த பதவிகளைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசத்துக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிந்து நேரடியாகச் சென்று பல திட்டங்களை மேற்பார்வை செய்து திறமை யாகச் செய்து முடித்தவர்.

மிக முக்கியமாக, கடந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் மிக நெருக்கமான முறையில் இணைந்து வடக்கு, கிழக்கில் அபிவிருத்திச் செயற் பாடுகள், வேலைவாய்ப்புக்கள், உள்ளிட்ட கணிசமான பல பணிகளைக் காத்திர மாக முன்னெடுத்தவர்.

அதேநேரம், எதிர்காலத்திலும் அவரது சேவைகள் தமிழ் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததவையாகவே இருந்தன. இதனைப் பலரும் உணர்ந்திருந்தார்கள். அவரை மக்கள் சேவைக்கு அழைத்து வருவதற்கான சமிக்ஞைகள் பலவற்றை யும் எமது கட்சியின் உறுப்பினர்களும், புத்திஜீவிகளும் வலியுறுத்தியிருந்தனர்.

சுயாதீன மனித உரிமைகள் தொடர் பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகப் பணியாற்றிக் கொண் டிருந்த தருணத்தில் அவர் நோய்வாய்ப் பட்டு இயற்கை எய்திவிட்டார். அவரது பிரிவு தமிழினத்துக்குப் பெரும் இழப்பாகும்.

நிர்வாக ஆளுமை மிக்க பெருமக னாரை தமிழ்ச் சமூகம் இழந்துவிட்டது. அவரது இழப்பு நிரப்ப முடியாத வெற்றிட மாகும். அவரைப் பிரிந்து நிற்கும் அவரது குடும்பத்தார் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

## மரியசேவியர் அடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலாமன்றத்தின் ஸ்தாபகர், இயக்குநர் கலைத்தூது அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்று காலை 8 மணிக்கு யாழ்.புனித மரி யன்னை பேராலயத்தில் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ் ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் மரிய சேவியர் அடிகளின் புகழுடல் புனித கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அடிகளாரின் இறுதி நிகழ்வில் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## இறுதிப் போரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேநேரம், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் மௌனம் சகல தமிழர்களையும் வேதனைக்கு உள்ளாக்கி யுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் உள்ளிட்ட 08 விடயங்கள் மீதான விவாதத்தில் உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நாட்டின் கிறிஸ்தவ திருச்சபை யின் அதி உத்தமர் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மிகக் கீழ்த்தரமாக விமர்சிக்கின்றார்.

ஒரு மதம் கடந்து, மதத் தலைவர் என்ற அந்தஸ்தை கடந்து அவரால் உதிர்க்கப் படுகின்ற வார்த்தைகள் இன்று பல மக்க ளுடைய புருவங்களை உயர்த்த வைத் துள்ளன.

இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், குழந் தைகள் சாகடிக்கப்பட்டனர். பலர் காணா மல் ஆக்கப்பட்டனர்.

ஏன் இவர்களுக்காக ஒரு நீதி விசா ரணை வேண்டும் எனப் பேராயரால் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சிங்கள கிறிஸ்தவர்களுக்கா கப் பேசுகின்றாரா? அல்லது உலகத்தில் வாழ்கின்ற கிறிஸ்தவர்களுக்காகப் பேசு கின்றாரா? என்ற கேள்வி உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலான வர்கள் தமிழ் கிறிஸ்தவர்கள். தமிழ் ஆராத னைகள் நடைபெறுகின்றபோதுதான் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. அதனையும் பேராயர் கருத்தில்கொள்ள வேண்டும் – என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் 8 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட் டுள்ளவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வு கூடம் என இரண்டிலும் 702 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டன. அதில் 21 பேருக்குத் தொற்றுஉள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 8 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசா லையில் நோயாளர் விடுதியில் மூன்று பேருக்கும், வைத்தியசாலை உத்தியோகத் தர் ஒருவருக்கும் என நால்வருக்குத் தொற்றுஉள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப் பட்டிருந்தவர்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதி காரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் ஏற்கனவே சுயதனிமைப்படுத் தப்பட்டிருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத் துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. அவர் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதி காரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. அவர் ஏற்கனவே சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்தவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்ற மூவருக்குத் தொற்றுஉள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரில் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 460 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட் டன. அவற்றின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைக்காகக் காத்திருக்கின்றோம் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை திருச்சபையின் ஆதனங்களை ஆக்கிரமிக்க யூனியன் கல்லூரி முயற்சியாம்!

## குற்றம் சுமத்தி திருச்சபை மூப்பர் அறிக்கை

தெல்லிப்பளை திருச்சபையின் 'மின் ஹௌஸ் வளவு சட்டப்படி அமெரிக்கா – சிலோன் மிஷனுக்குச் சொந்தமாக இருக்கின்ற போதிலும் திருச்சபையின் மின் ஹவுஸ் வளாகத்தை யூனியன் கல்லூரி அதிபர் அடாவடித்தனமாகப் பூட்டுப் போட்டு ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறார் எனத் தெல்லிப்பளை திருச்சபை மூப்பர் திருமதி ஞானதீபம் இராஜகாந்தன் குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தெல்லிப்பளை திருச்சபை இருநூறு வருடங்களுக்கு மேலாக அமெரிக்கா – சிலோன் மின் திருச்சபையின் முக்கிய தளமாக விளங்குகிறது. இந்த நற்தேவாலயமானது தந்தை செல்வாவின் குடும்பத் தேவாலயம். அதன் சொத்து இன்று சமயவாதிகளால் பறிக்கப்படுகிறது. இவ் விடயம் அவ்விடத்தைச் சேர்ந்த மாவை சேனாதிராஜாவின் கவனத்திற்கும் கூட கொண்டுவரப்பட்டது.

தெல்லிப்பளை திருச்சபையின் 'மிஷன் ஹௌஸ் வளவு சட்டப்படி திருச்சபைக்குச் சொந்தமாயிருந்தும், யூனியன் கல்லூரி அதிபர் தில்லையம்பலம் வரதன் நில அளவீட்டுப் பத்திரங்களைத் தவறான முறையில் மாற்றி திருச்சபைக்குரிய பூமியைத் தங்களுடையது என ஆக்கிரமிக்க முயற்சிக்கின்ற அடாவடிச் செயலை திருச்சபை ஆலயத்தவர்கள் என்ற முறையில் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.



இருநூறுவருட பாரம்பரியத்து தெல்லிப்பளை திருச்சபையின் மிஷன் ஹவுஸ் வளாகம் கிறிஸ்தவர்களை அடக்கும் முகமாக வரதனால் பூட்டுப் போடப்பட்டுள்ளது.

இச்செயல் 2002 ஆம் ஆண்டிலிருந்து மறைமுகமாகவும் பின் 2017 இலிருந்து அதிதந்திரமுறையாகவும் நடைபெறுவதை சபையோர் அவதானித்து வருகிறோம்.

இதை முன்னின்று செயற்படுத்தும் தற்போதைய அதிபர் வரதன் யூனியன் கல்லூரியில படிக்கின்ற மாணவர்களை மட்டுமின்றி அவர்களின் பெற்றோர்களையும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் தூண்டிவிட்டு வருகின்றமை, மேலும், தேவையான ஆவணங்களை ஆலயத்தினர் பெறுவதிலும் தடைகள் ஏற்படுத்துதல் போன்ற அடாத்தான செயல்களைத் தொடர்வதையும் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

காவற்துறையையும், வலிகாமம் வடக்கு பிரதேச சபை உத்தியோகத்தர் சிலரையும், யாழ்ப்பாணக் கச்சேரி நில அளவையாளர் சிலரையும், வடமாகாணக் கல்வி உத்தியோகத்தர் சிலரையும் அதிபர் தம்முடைய காணி அபகரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் பாவித்து வருகின்றமையையும் நாம் அவதானித்துள்ளோம். இதற்குரிய திருச்சபை ஆவணங்களை தேசிய கல்வித் திணைக்களம், நில அளவை ஆணையாளர் ஆகியோரிடம் இருந்து பெற்று வட மாகாண ஆளுநர் ஒரு சட்டபூர்வமான முடிவை விளக்கத்துடன் அளிக்கும் வரை, தெல்லிப்பளை ஆலய அங்கத்தவர் தம் உரிமைக்கான போராட்டத்தைத் தொடர்வோம். இப்போது நடத்தும் அட்டூழியங்களை அதிபர் உடனடியாக நிறுத்தவேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் தனது தீர்ப்பை வழங்கும் வரை திருச்சபை தனது உடைமைக்காக இறுதிவரை போரிட்டுக் கொண்டிருக்கும். தமிழினத்தின் ஒற்றுமையை விரும்புவோர் இப்பிரச்சினையை உடனடியாக தீர்க்க முன்வரும் படி வேண்டுகிறோம்.

இருநூறுவருட பாரம்பரியத்து தெல்லிப்பளை திருச்சபையின் மிஷன் ஹவுஸ் வளாகம் கிறிஸ்தவர்களை அடக்கும் முகமாக அதிபரால் பூட்டுப்போடப்பட்டுள்ளது.
– என்று உள்ளது.

# ஆலய மணிக்கோபுரம் மீளமைப்பு

*யாழ்ப்பாணம் மெதடிஸ் பரி பேதுரு ஆலயத்தின் மணிக்கோபுரம் மீளமைக்கப்பட்டு கடந்த ஞாயிறன்று மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.*

*1823 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தில், 51 வருடங்கள் மெதடிஸ்த திருச்சபையில் ஊழியம் செய்தவண.வி.பென்ஞமின் ஞாபகார்த்தமாக இந்த மணிக்கோபுரம் 1942 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. போர்ச் சூழலில் பாதிப்புற்ற மணிக்கோபுரம் சபை மக்களின் முயற்சியால் இப்போது புதுப் பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளது.*





# ஈஸ்டர் தாக்கு சூத்திரதாரியாக நஃபர் மௌலவி அடையாளம்

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி எனத் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள நஃபர் மௌலவி அடையாளம் காணப்பட்டுள்ளார். சஹ்ரானையும் அவரது ஆதரவாளர்களையும் மூளைச் சலவை செய்வதன் மூலம் தாக்குதலை நடத்த தூண்டிவிட்டார் என்பது தெரியவந்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

உளவுத்துறை தகவல்களின்படி, லுக்மான் தாலிப், லுக்மான் தாலிப் அகமட் என்ற தீவிரவாதிகள் 2016 முதல் தாக்குதல்கள் நடக்கும் வரை பல சந்தர்ப்பங்களில் சஹ்ரானை சந்தித்தனர் எனவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதில் லுக்மான் தலிப் அகமட் இலங்கையில் பிரசாரங்களை நடத்த ஏற்பாடு செய்திருந்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சாரா ஜஸ்மின் என்பவர் இறந்துவிட்டாரா இல்லையா என்பதை உறுதிப்படுத்த புலனாய்வு துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# விசேட பொருளாதார மத்திய நிலையங்களை வடக்கு மற்றும் கிழக்கில் அமைக்க அனுமதி

வடக்கு மற்றும் கிழக்கில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களைத் திறப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் தொழில்நுட்பத்தின் ஊடாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றது.

இதன்போதே அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்களை வழங்கும் வேலைத் திட்டத்தை வடக்கு, கிழக்கில் விரிவுப்படுத்தும் நோக்கில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்குத் தற்பொழுது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனால் நாடு தழுவிய ரீதியில் இந்த வலைப்பின்னலை விரிவுபடுத்துவதற்காக தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**சிவபூமி முதியோர் இல்லம்**
**தொல்புரம், சுழிபுரம்**

**எமது சிவபூமி முதியோர் இல்லம் 07/04/2007 இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய ஆண்டுவிழா நாளில் எமக்கு ஆசிகளையும், ஆதரவுகளையும் வழங்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.**

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்.**

**நிர்வாக சபை,**
**சிவபூமி அறக்கட்டளை,**
**கோண்டாவில்.**

**புதிய அனுமதி**

* **அறுபது வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
* **சைவபோசனம் மட்டும்.**
* **எவரது ஆதரவும் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை.**

**நேர்முக உரையாடல் மூலம் பொருத்தமானவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு:-**
**தலைமை அலுவலகம்,**
**கோண்டாவில்.**
**T.P - 021 222 7938**
**sivapoomi@gmail.com**

**நிர்வாக சபை,**
**சிவபூமி அறக்கட்டளை,**
**கோண்டாவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தடுப்பு நடவடிக்கை மந்தம்

கொரோனா நோய்த் தொற்றின் பரவல் வேகம் இலங்கையில் குறைந்து வருகின்றதாம்.

இலங்கையில் இந்தப் பரவல் வேகம் 17.07 வீதம் குறைவடைந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையர் என்ற முறையில் இது நமக்குத் திருப்தி தரக் கூடிய தகவல்தான். தொற்றைத் தடுக்கும் தடுப்பூசி செலுத்தும் விடயத்தை இன்னும் நாடு சரியாக ஆரம்பிக்கவேயில்லை. அதற்குள் தொற்றுப் பரவல் வீதம் குறைகின்றது என்பது மெச்சத்தக்க – வரவேற்கத் தக்க – அம்சம்தான்.

ஆனால், தேசிய ரீதியில் பரவல் வீதம் வீழ்ச்சியடையும் இந்தச் சமயத்தில்தான் வடக்கில் – குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் – அந்த வைரஸ் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றது. எனவே தேசிய ரீதியில் பரவல் வீதம் வீழ்ச்சி என்ற திருப்தியை அனுபவிக்கும் நிலையில் வடக்கு நிலைமை இல்லை.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் பதினொரு நாடுகளில் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ள நிலையில், இலங்கையில் மட்டும் பரவல் வீதம் குறைந்து வருகின்றது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்திருக்கின்றார்.

இந்த நெருக்கடியை நமது அயல் தேசமான இந்தியாவும் திடீரென எதிர்நோக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவில் ஆரம்ப காலத்தில் தினசரி சுமார் ஒரு லட்சம் பேர் என்று இருந்த தொற்று வீதம் இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் சராசரியாக பதினையாயிரம் முதல் இருபத்தியையாயிரம் பேருக்குத் தொற்று என இறங்கியிருந்தது. அது இப்போது மீண்டும் எழுபத்தியையாயிரம், எண்பதாயிரம் என்று எகிறும் நிலைமை தென்படுவதாக புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், கொவிட் வைரஸுக்கான தடுப்பூசிகளை உள்நாட்டில் பெருமளவு தயாரித்து வரும் இந்தியா, அவற்றில் கணிசமானவற்றை உலகின் 85 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற போதிலும், தனது நாட்டுக்குத் தேவையானவற்றைத் தயாரித்து விநியோகித்து, மக்களுக்கு வழங்குவதன் மூலம், இப்போது மீள அதிகரித்து வரும் தொற்றை ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடும் என்று நம்பப்படுகின்றது.

ஆனால் இலங்கையின் நிலைமை அப்படியல்ல. தடுப்பூசி ஏற்றும் திட்டம் இன்னும் சரியான முறையில் ஆரம்பிக்கப்படக் கூட இல்லை.

முதலாம் கட்டத் தடுப்பூசி ( முதல் டோஸ்) பெற்றுக் கொண்டோருக்கு இரண்டாவது டோஸ் கொடுப்பதற்கான தடுப்பூசி கிடைக்குமா என்ற குழப்பம் இன்னும் நீடிக்கின்றது. இதனால் ஏற்கனவே முதலாவது 'டோஸ்' பெற்றுக் கொண்ட பல லட்சம் பேருக்கும் அத் தடுப்பூசி செலுத்தியமையால் கிட்டக்கூடிய மருத்துவக் காப்பு வீணாக செயலிழந்து போகுமோ என்றெல்லாம் அஞ்சப்படுகின்றது.

முதலாம் கட்டத் தடுப்பூசி பெற்றோருக்கு அதே ரகத் தடுப்பூசியின் இரண்டாம் கட்டத்தை இந்தியாவில் இருந்து பெறுவதற்கு அரசும் யுனிசெவ் அமைப்பும் பகீரதப் பிரயத்தினங்களில் ஈடுபட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

அறுபது வயதுக்கு மேற்பட்டோர் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகும் போது அதிகம் பாதிக்கப்படுகின்றனர் அல்லது உயிரிழக்கின்றனர் என்று கூறப்படுகின்றமையால் குறைந்த பட்சம் நாட்டில் அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்காவது இந்தத் தடுப்பூசிகளை முதலில் செலுத்த வேண்டும்.

ஆனால் அதற்கான நடவடிக்கை எதனையும் முழுமையான வகையில் அரசு செய்யவேயில்லை. அதற்குள் வடக்கில் கொரோனா தனது பெரும் தாண்டவத்தை – கைவரிசையை – காட்டி வருகின்றது.

வடக்கில், சுகாதார, மருத்துவ ஊழியர்களைத் தவிர்ந்த பிறருக்கு இன்னும் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கப்படவேயில்லை.

உலகில் பல நாடுகளில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்து மூன்று, நான்கு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் இலங்கையில் அது இன்னும் ஆரம்பக் கட்டத்தைக் கூட சரியாக எட்டவில்லை.

அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இது குறித்து வெறும் வாய்ப்பந்தல் போடுகின்றார்களே தவிர, களத்தில் – மக்கள் மத்தியில் – உருப்படியாக ஏதும் நடப்பதாகத் தெரியவில்லை.

தினசரி பல்லாயிரம் பேருக்கு பி.சி.ஆர். சோதனைகளை நடத்துவதும் –

ஆயிரக் கணக்கானோருக்கு தடுப்பூசியைச் செலுத்துவதும் –

மாதாந்தம் பல நூறு கோடி ரூபாய்களை ஏப்பம் விடும் பாரிய பணி. விரிவான நடவடிக்கை.

மிகுந்த அவதானிப்புடனும், நிபுணத்துவ நுட்பத்துடனும், சரியான கண்காணிப்பு, கவனிப்புடனும் முன்னெடுக்கப்பட வேண்டிய ஆக்கபூர்வமான செயற்பாடு இது

நமது நாட்டில் அத்தகைய சிரத்தை இந்த விடயத்தில் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. எல்லாம் ஒப்புக்குச் சப்பாணி போல – சமாளிப்பு வேலையாகவே – இங்கு நடக்கின்றன போலத் தோற்றுகின்றது. கொரோனாப் பேரரக்கனை எதிர்கொள்ள இந்த உஷார் போதுமானதல்ல என்பதுதான் நிஜம்.

# மக்கள் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கிய நிர்வாகி சிவஞானசோதி

## ரிஷாத் புகழாரம்



சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளரும் மூத்த அரச நிர்வாகியும் மனித நேயமுள்ளவருமான வே.சிவஞானசோதி, இறைபதமடைந்த செய்தியால், கடும் கவலையுற்றுள்ளார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளவை வருமாறு –

நண்பர் சிவஞானசோதி, நாடறிந்த அரச நிர்வாகி. செய்யும் தொழிலே தெய்வம் என்கின்ற தத்துவத்தை அவரது சேவையில் காண முடிந்தது. வேறுபாட்டுச் சிந்தனைகள் அவரது அரச பணியில் இருந்தமை கிடையாது. எவ்வளவு பெரிய, எத்தனை சிறப்புடைய பதவிகளை அவர் வகித்த போதும், செருக்குத்தனமின்றிக் கடமையாற்றிய கண்ணியவானாகவே அவரை நான் பார்க்கிறேன்.

போருக்குப் பின்னர் மக்களுக்குச் செய்ய வேண்டியிருந்த சகல கருமங்களையும் களத்தில் நின்று சாதித்தவர் அவர். மீள்குடியேற்றம் என்பது, வார்த்தைகளால் சொல்லிவிட்டு வாழாவிருந்து விடுவதல்ல. மக்களின் நாளாந்த வாழ்நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவதே இதில் பிரதானம். இத்தனையையும் இலகுவாகச் செய்து முடிக்க அமரர் சிவஞானசோதி அரும்பாடுபட்டார்.

அப்பலோ வைத்தியசாலையில் அண்மையில் அவரைக் காணக் கிடைத்தது. அவரது மனைவியார் சக்கரநாற்காலியில் வைத்தவாறு சிவஞானசோதியை தள்ளிக்கொண்டு வந்தார். நன்கு மெலிந்திருந்த அவரது தோற்றத்தைக் கண்டு நான் கவலையடைந்தேன். அவர் என்னை அடையாளங்காணவில்லை. என்றாலும், நானே அவர் அருகில் சென்று, 'சிவஞானசோதியா நீங்கள்?' எனக்கேட்டுவிட்டு, சுகம்விசாரித்துவிட்டு வந்தேன். 'மிக விரைவில் குணமடைந்து விடுவேன்' என்று அவர் என்னிடம் கூறினார். ஆனால், ஒருவாரம் கடந்த பின்னர் அவரது மரணச் செய்தியே எனக்கு கிடைத்தது. என்ன செய்வது, காலம் வந்தால், இவ்வாறுதான் நாமும் ஒரு நாள் காவுகொள்ளப்படுவோம். அவரது இழப்பால் துயருறும் அவரின் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்' என்று கூறினார்.

## திருமதி இலங்கை அழகியின் கிரீடம் பறிப்பு;

# கரோலின் ஜூரி பொலிஸ் நிலையத்தில் முன்னிலை

இலங்கையில் நடத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான திருமதி இலங்கை அழகிப் போட்டியில் இடம்பெற்ற சர்ச்சை தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக திருமதி உலக அழகியான கரோலின் ஜூரிக்கு கறுவாத்தோட்டப் பொலிஸார் அழைப்பு விடுத்திருந்தனர்.

குறித்த அழைப்புக்கு ஏற்ப, கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் கரோலின் ஜூரி வாக்குமூலம் வழங்குவதற்கு முன்னிலையாகியுள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான திருமதி இலங்கை அழகிப் போட்டியில் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள புஷ்பிகா டி சில்வா, கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் கரோலின் ஜூரிக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர்மீது விசாரணை மேற்கொள்வதற்காக கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னிலையாகுமாறு கரோலின் ஜூரிக்கு அழைப்பு விடுத்திருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற, திருமதி இலங்கை அழகிப் போட்டியில் புஷ்பிகா டி சில்வா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

இந்த சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் ஜூரி, அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதாவது, வெற்றியாளர் விவாகரத்து செய்யப்பட்டவர். அத்தகைய ஒருவர் இதில் போட்டியிட முடியாது. எனவே இரண்டாவது வெற்றியாளர், முதலாவது வெற்றியாளராக தெரிவு செய்யப்படுகிறார் என அறிவித்தார்.

அதன்பின்னர் ஜூரி, மேடையில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வாவின் தலையில் இருந்த கிரீடத்தை அகற்றி, இரண்டாவது வெற்றியாளருக்கு அணிவித்து அவரைநிகழ்வின்வெற்றியாளராகஅறிவித்தார்.

இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்ததுடன் பாதிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா, தான் விவாகரத்தானவர் இல்லை என அறிவித்ததுடன் பொலிஸிலும் முறைப்பாடு ஒனறைப் பதிவு செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலை தடுக்க பல்வேறு வழிகள் இருந்தன

## என்கிறார் சமல்

கொழும்பு, ஏப்.07

ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்க வாய்ப்புகள் பல இருந்த போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய முறையில் செயற்பட்டிருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம் என சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவனெல்லவில் புத்த சிலை உடைப்புடன் தொடர்புடைய பலர் ஈஸ்டர் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் என்றும், அந்த நேரத்தில் அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான பரிந்துரைகளை வழங்க அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழு நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் குற்றவாளிகளை அடையாளம் காணவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நாட்டில் நிகழாமல் பார்த்துக் கொள்ளவும்



தாம் உறுதிபூண்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது குறித்த பரிந்துரைகள் சட்டமா அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் சந்தேக நபர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்களின் கடமை என்றும் சமல் ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதலுக்கு உதவிய 32 சந்தேக நபர்கள் இந்த அறிக்கையில் பெயரிடப்பட்டுள்ளனர் எனவும், மேலும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்னப்புவ உதவி பொலிஸ் அத்தியட்சகரின் இடமாற்றத்தின் பின்னால் அரசியல் இல்லை

## சரத் வீரசேகர தெரிவிப்பு



வென்னப்புவ ஏ.எஸ்.பி. எரிக் பெரேரா இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு பின்னால் எந்த அரசியலும் இல்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி.முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வீரசேகர, பெரேராவுடன் மேலும் 30 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் வென்னாபுவ ஏ.எஸ்.பியின் இடமாற்றத்தில் எந்தவொரு முறைகேடும் இடம்பெறவில்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை கடமைகளை ஏற்றுக்கொண்ட புதிய அதிகாரி, பெரேராவை விடத் தனது வேலையைச் சிறப்பாகச் செய்கிறார் எனவும் அமைச்சர் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

எரிக் பெரேரா தற்போது நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் பணியாற்றி வருகிறார் என அவர் கூறியுள்ளார்.

# இலங்கையில் புத்தர் சிலையை சேதமாக்கிய இந்தியர் திடீர் சாவு

குளியாப்பிட்டி பிரதேசத்தில் புத்தர் சிலைக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபரே திடீரென மரணமடைந்துள்ளார்.

வாரியபொல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் திங்கள் இரவு மூச்சுவிட சிரமம் காரணமாக வாரியப்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் என சிறைச்சாலை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் 45 வயதுடைய திலிப் குமார் என்ற இந்திய பிரஜையாகும். உயிரிழந்தவரின் சடலம் வாரியப்பொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் கோவிட் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கண்டறிய சிறப்பு நடவழக்கை ஏற்பாடுகள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கண்டறிய விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை குறைக்கும் நோக்குடனே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கூறினார்.

மார்ச் 4 ஆம் திகதி மாத்திரம் வீதி விபத்துக்களில் சிக்குண்ட 15 பேர் உயிரிழந்துள்ளனர். இது இவ்வாண்டு ஒரே நாளில் வீதி விபத்துக்களால் அதிகளவானோர் உயிரிழந்த சந்தர்ப்பமாகும்.

# உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்குத் தடை!



உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்குத் தடை விதிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இதுகுறித்த வர்த்தமானி அறிவிப்பு இன்று இரவுக்கு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாம் எண்ணெய்க் கொள்கலன்களை விடுவிக்க வேண்டாம் என சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நாட்டில் பயிரிடப்பட்டுள்ள பாம் எண்ணெயை உற்பத்திசெய்யும் செம்பனை மரங்களைக் கட்டங்கட்டமாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# பாம் எண்ணெய் இறக்குமதித் தடை தீர்மானம்; பேக்கரி உரிமையாளர்கள் சங்கங்கள் எதிர்ப்பு

நாட்டில் பாமாயில் பாம் எண்ணெய் இறக்குமதியை முழுமையாக தடைசெய்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தால் பேக்கரி உற்பத்தி முற்றிலும் சரிந்து விடும் என்று அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி பொருள்களில் அத்தியாவசியமான மார்கரைன் பாம் எண்ணெயை பயன்படுத்தி தயாரிக்கப்படுவதால், அதைத் தடைசெய்வது அனைத்து பேக்கரி பொருள்களிலும் பல சிக்கல்களை ஏற்படுத்துகிறன.

எனவே அரசாங்கம் எடுக்கும் இந்த முடிவை கடுமையாக எதிர்ப்பதாக அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன கூறினார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதியை முழுமையாகத் தடை செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பணிப்புரையின்பேரில் அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஜனாதிபதியின் செயலாளர் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டு சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாம் எண்ணெயை விநியோகிப்பதை நிறுத்துமாறு சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது. அத்துடன் முள்தேங்காய் பயிர்ச் செய்கையும் முழுமையாகத் தடைசெய்யப் படுகின்றது.

மேலும் முள்தேங்காய் பயிர்ச்செய்கையை முழுமையாகத் தடை செய்வதற்கு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை நடைமுறைப்படுத்தும் வகையில் குறித்த சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் முள்தேங்காய் பயிரிடுவதைப் படிப்படியாக நிறுத்துவதற்கு ஜனாதிபதி ஆறு மாதங்களுக்கு முன்னர் பணிப்புரை விடுத்திருந்தார்.

தற்போது பயிரிடப்பட்டுள்ள முள்தேங் காய் பயிர்ச்செய்கை கட்டம் கட்டமாக ஒரு தடவைக்கு 10 வீதம் என்ற வகையில் அகற்றி அதற்கு மாற்றீடாக இறப்பர் அல்லது சுற்றாடல் பாதுகாப்புடன்கூடிய ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கு அந்நிறுவனங்களுடன் சட்டத்திற்கமைவாக செயற்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக நடைமுறைப்படுத்தும்போது முள்தேங்காய் பயிர்ச்செய்கை மற்றும் பாம் எண்ணெய் பயன்பாட்டை முழுமையாக நிறுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

# இந்தியாவிடமிருந்து தடுப்பூசியைப் பெற தொடர்ந்து முயற்சி



இந்தியாவிடமிருந்து கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் இந்தியாவுடன் தீவிர பேச்சுகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தவிடயம்தொடர்பாகத்தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான துணை பிரதிநிதி எம்மாப்ரிகாம், கொவேக்ஸ் வசதி மற்றும் யுனிசெப் ஆகியவற்றின் பங்காளிகள் இந்த விவகா ரத்தில் மிக தீவிரமாக செயற்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கான அடுத்த கட்ட தடுப்பூசிகளைப் பெறுவதற்கு முடிந்தவரை விரைவுபடுத்தும் முயற்சியாக, இந்திய அரசாங்கத்துடனும் சீரம் இன்ஸ்ட்டியூட் ஓப் இந்தியாவுடனும் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்பேரில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதை சீரம் நிறுவனம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

சீரம் நிறுவனம் மூலம் பெறப்பட்ட கொவேக்ஸ் வசதியிலிருந்து முதல் தொகுதி கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் மார்ச் 7 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் பந்துலவின் கருத்தால் சபையில் வெடித்தது சர்ச்சை



அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்த சர்ச்சை கருத்தால் அரசாங்கம் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி மூன்று கிலோ அரிசியில் ஒரு குடும்பம் இரண்டு வாரங்கள் உணவு சமைத்து உட்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ள கருத்தே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே 25 ஆயிரம் ரூபாவில் ஒரு குடும்பம் ஒரு மாதத்துக்கு உணவு உட்கொண்டு வாழலாம் என கருத்து தெரிவித்து சர்ச்சையை கிளப்பியவர் பந்துல குணவர்த்தன.

இந்தநிலையில், அரசாங்கம் 1,000 ரூபாவிற்கு நிவாரணப் பொதி வழங்குவதாகவும் ஆனால் அந்த நிவாரணப் பொதியை குறைந்த விலையில் வேறு இடங்களில் சிலர் விற்பனை செய்கின்றனர் எனவும் ஆனால் அரசாங்கத்தின் நிவாரண பொதியில் உள்ள பொருள்கள் மிகவும் தரமானவை எனவும் பந்துல தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

# 6 லட்சம் ஸ்புட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகளை மேலும் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி



கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் வகையில், மேலும் 60 லட்சம் ஸ்புட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகளை மேலும் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசத்தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ரஷ்யாவிடமிருந்து 7 லட்சம் ஸ்புட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரவு தூங்கச் சென்றவர் யாழில் சடலமாக மீட்பு

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட அராலி மேற்குபகுதியில் குடும்பஸ்தரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கள் இரவு தூக்கத்திற்குச் சென்ற குடும்பஸ்தரே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் திங்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடனேயே தூக்கத்திற்கு சென்றார் எனவும், காலையில் நீண்ட நேரமாக தூக்கத்தில் இருந்து அவர் எழுந்திருக்காமையால் உறவினர்கள் அவரை எழுப்ப முற்பட்டுள்ளனர்.

இதன்போதே அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதாக உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கந்தசாமி ஜெயராசா (வயது 54) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு அராலி மேற்கில் வசிக்கும் பெண் ஒருவரை திருமணம் செய்து வசித்து வந்த நிலையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாககூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பில் இருதயப் பிரிவு இயங்க வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை

## சாணக்கியன் எம்.பி. சபையில் காட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இருதயவியல் பிரிவின் ஆய்வக (Cardiology Unit - Cardiac Catheterization Laboratory) வசதிகளை செய்துகொடுக்க சுகாதார அமைச்சு இன்னும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உறுதியளித்தும் இன்னும் அந்த வசதி ஏற்படுத்தப்படவில்லையெனவும் மட்டக்களப்புக்கு கிடைக்க வேண்டிய குறித்த ஆய்வகத்துக்கான சில வசதிகள் களுத்துறைக்கு மாற்றப்பட்டமை தொடர்பாகவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடமே அவர் இந்தக் கேள்விகளையும் கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்– ஒட்டுமொத்த நாட்டிலும் வைத்தியர்களின் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

வடக்கு – கிழக்கில் சேவையாற்றும் வைத்தியர்கள், விசேடமாக பெண் வைத்தியர்கள், கடமையில் இணைந்து இரண்டு மூன்று மாதங்களிலேயே கர்ப்பகால விடுமுறையை எடுக்கிறார்கள். பின்னர் இரண்டு வருடங்களிலேயே வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

வடக்கு – கிழக்கில் சேவையாற்றினால் இரண்டு வருடங்களில் இடமாற்றம் கிடைத்துவிடும் என்ற சட்டம் இருக்கின்றதோ தெரியவில்லை, நான் விசேடமாக, இங்கு ஒன்றைக் கூற வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருதயவியல் பிரிவின் ஆய்வகம் ஒன்று இல்லாத விவகாரம் தொடர்பாக நான் ஏற்கனவே சுகாதார அமைச்சராகிய உங்களை வந்து சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். இதன்போது பிரதமரும் இருந்தார். இந்த சந்திப்பின்போது, நீங்கள் குறித்த ஆய்வகத்தை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பெற்றுத் தருவதாகக் கூறியிருந்தீர்கள். எனினும், அது இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கிடைக்கவில்லை.

அத்தோடு, கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மட்டக்களப்பிற்கு வருகைத் தந்தபோது, உடனிருந்த இராஜாங்க அமைச்சர் ஒருவர், தனது மாவட்டத்தில் இருதயவியல் பிரிவின் ஆய்வகம் அமைக்கப்படும் என்றும் எதிர்காலத்தில் எமது மாவட்டத்திற்கு இதனை வழங்க நடவடிக்கைஎடுக்கப்படும்என்றும்கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில், குறித்த ஆய்வகம் தொடர்பான நிலைப்பாட்டை அறிவிக்க முடியுமா எனக் கேட்க விரும்புகிறேன். ஏனெனில், கிழக்கு மாகாணத்துக்கு இவ்வாறான ஆய்வகம் ஒன்று இல்லாமல் இருக்கிறது. இருதயவியல் பிரிவின் ஆய்வகம் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் மாவட்டத்திற்கு அருகிலுள்ள மாவட்டங்களில் இந்த வசதிகள் காணப்படுகின்றன.

இதேவேளை, களுத்துறைக்கு மாற்றப்பட இருப்பதாக அறியக்கிடைக்கின்றது. ஆனால் அங்கிருந்து கொழும்புக்கான பயணத் தூரம் ஒரு மணித்தியாலங்களே, ஆனால் மட்டக்களப்புக்கு கிடைக்குமானால் பயனடையப்போவது கிழக்கு மாகாணம் முழுவதுமே.

மட்டக்களப்பு அல்லது திருகோணமலையில் உள்ள ஒரு நோயாளி, இந்தச் சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்புக்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ எட்டு மணிநேரம் செலவழித்துப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மட்டக்களப்பு மாவட்டத்துக்கே இதனை வழங்கக்கூடிய வழிமுறைகள் ஏதேனும் உள்ளனவா' என சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்துள்ள சுகாதார அமைச்சர், 'மட்டக்களப்புக்குக் கொண்டுவரவிருந்த நிலைமையில் அங்கு காணப்பட்ட தொழில்நுட்பப் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

இதன்காரணமாக, களுத்துறையில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேசவாதிகளால் கட்டுவிக்கப்பட்ட கட்டடத்துக்கு மாற்றுவதாக முடிவெடுக்கப்பட்டது. அடுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது மட்டக்களப்பிற்கு வழங்கப்படும். இது தொடர்பாக நான் விவரமான அறிக்கை ஒன்றை அளிக்கிறேன்.



இதேவேளை, ஒட்டுமொத்த நாட்டிலும் வைத்தியர்களின் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. வடக்கு கிழக்கில் சேவையாற்றும் வைத்தியர்கள், விசேடமாக பெண் வைத்தியர்கள் கடமையில் இணைந்து இரண்டு மூன்று மாதங்களிலேயே கர்ப்பகால விடுமுறையை எடுக்கிறார்கள். பின்னர் இரண்டு வருடங்களிலேயே வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். இதனாலேயே பற்றாக்குறை நிலவுகின்றது' என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், முதல் ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்னரே தீர்மானிக்கப்பட்டபடி மட்டக்களப்பிற்கு வழங்கிவிட்டு அடுத்த ஒப்பந்தத்தின் மூலம் களுத்துறைக்கு வழங்குமாறு சாணக்கியன் இதன்போது வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கட்சியின் பின்னணியில் பேராயர்



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட கருத்து தொடர்பில், மீள்பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பேராயரின் கருத்திற்கு பின்னால் அரசியல் சக்தி ஒன்று இருப்பதாகவும் அதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த நாட்களில் விசாரணை ஆணைக்குழுவில் மைத்திரிபால சிறிசேனவின் பெயர் கூறப்பட்டுள்ளதாகவும் தாக்குதல் நடப்பதை அறிந்து வெளிநாடு சென்ற மைத்திரிபால சிறிசேன ஆடை அணிந்து கொண்டாகதைக்கிறார் எனவும் தேர்தலில் போட்டியிடுவதாக அவர் அறிவிப்பது வெட்கப்பட வேண்டியது எனவும் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கர்தினாலின் கருத்து கவலை அளிப்பதாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் விவரத்தொகுப்பு வெளியிடல்

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டு "கலைஞர் விபரத் தொகுப்பு" எனும் மலர் வெளியீட்டு மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த மலருக்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கலைஞர்கள் வரும் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த விடயம் தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் திருமதி உ.யசோதா கேட்டுக் கொண்டுள்ளார்.

# கொரோனாக் குணமடைவு 91 ஆயிரத்தை அடைகிறது

கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 90 ஆயிரத்து 708 ஆக உயர்ந்துள்ளது

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 145 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இதுவரை தொற்று உறுதியான 93 ஆயிரத்து 595 பேரில் 2 ஆயிரத்து 301பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களில் 586 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அழகியின் கிரீடம் பறிப்பு; மேயர் றோஸி சேனநாயக்க அதிருப்தி




இலங்கையில் நடத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான திருமதி இலங்கை அழகிப் போட்டியின்போது, கரோலின் ஜூரியின் நடத்தையை பார்த்து வெறுப்படைந்ததாக கொழும்பு மேயர் றோஸி சேனநாயக்க தெரிவித்துள்ளார். மேலும் கரோலின் ஜூரி, குறித்த நிகழ்வில் செயற்பட்ட விதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தாமரை தடாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 2021 ஆம் ஆண்டுக்கான திருமதி இலங்கை இறுதிப் போட்டி நடைபெற்றிருந்தது. அதில் றோஸி சேனநாயக்கவும் விசேட அதிதியாகப் பங்கேற்றிருந்தார்.

குறித்த போட்டியின் உண்மையான வெற்றியாளரான புஷ்பிகா டி சில்வாவை வாழ்த்துவதற்காக நிகழ்வில் காத்திருந்த அவர், சம்பவம் நடப்பதற்கு முன்பே அங்கிருந்து வெளியேறி இருந்தார்.

இதன்போது நிகழ்வில் நீதிபதியாக இருந்தவர்கள், திருமதி இலங்கையின் வெற்றியாளராக புஷ்பிகா டி சில்வாவை தேர்வு செய்தனர்.

அதனைத் தொடர்ந்து வெற்றியாளருக்கு கரோலின் ஜூரி முடிசூட்டினார். மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, மேடைக்கே சென்று வாழ்த்து தெரிவித்தார்.

குறித்த சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் ஜூரி, அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டார். அதாவது, வெற்றியாளர் விவாகரத்து செய்யப்பட்டவர். அத்தகைய ஒருவர் இதில் போட்டியிட முடியாது. எனவே இரண்டாவது வெற்றியாளர், முதலாவது வெற்றியாளராகத் தெரிவு செய்யப்படுகிறார் என அறிவித்தார்.

அதன்பின்னர் ஜூரி, மேடையில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வாவின் தலையில் இருந்த கிரீடத்தை அகற்றி, இரண்டாவது வெற்றியாளருக்கு அணிவித்து அவரை நிகழ்வின் வெற்றியாளராக அறிவித்தார்.

இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்ததுடன் பாதிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா, தான் விவாகரத்தானவர் அல்லஎனஅறிவித்தமையுடன்பொலிஸிலும் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில் ஏற்பாட்டுக்குழு, புஷ்பிகா டி சில்வாவை மீண்டும் வெற்றியாளராக அறிவித்ததுடன் கிரீடத்தை அவரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக கொழும்பு மேயர் றோஸி சேனநாயக்க அதிருப்தி வெளியிட்டமையுடன் அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாங்கள் பெண்களை ஆதரிக்க வேண்டும். மாறாக பெண்களை ஆதரிக்க முடியாவிட்டால், வாயை சரி மூடிக்கொண்டிருக்க வேண்டும் என கரோலின் ஜூரியின் நடத்தை குறித்து அவர் விமர்சித்துள்ளார்.

இதேவேளை இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் திருமதி இலங்கைக்கான தேசிய இயக்குநர் சந்திமல் ஜெயசிங்க, புஷ்பிகா டி சில்வா விவாகரத்து பெற்றார் என்ற கூற்றை ஆதரிக்க ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் எவையும் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் புஷ்பிகா டி சில்வா மீண்டும் வெற்றியாளராக நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பில் நடைபெறும் பத்திரிகையாளர் சந்திப்பில், கிரீடம் அணிவித்து அறிவிக்கப்படுவார் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிடமிருந்து இலங்கை பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்

## சஜித் கூறுகின்றார்



கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈஸ்டர் தொடர் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில், இலங்கை அமெரிக்காவிடம் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சாட்சியமொன்றை வழங்குவதற்காக குற்றவியல் புலனாய்வு பிரிவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜெயமஹா சென்றிருந்தார். இதன்போது அவருடன் சஜித் பிரேமதாஸவும் சென்றிருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களை சந்தித்த சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அமெரிக்காவில் 9 - 11 தாக்குதல்களை விசாரித்த ஆணைக்குழுவின் அறிக்கை, பயங்கரவாத வேலை நிறுத்தத்தின் சூத்திரதாரி ஒசாமா பின்லேடனைக் கைது செய்ய, அங்குள்ள அரசாங்கத்திற்கு உதவியது.

மேலும் பின்லேடன் 9 - 11 தாக்குதல்களைப் பல ஆண்டுகளாகத் திட்டமிட்டமையை ஆணையகம் கண்டுபிடிக்க முடிந்தது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் சூத்திரதாரியை தீர்மானிக்க இலங்கையும் இதே போன்ற தந்திரங்களைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் 9 - 11 தாக்குதல்கள் தொடர்பான விசாரணை நடத்திய ஆணையகம், குடியரசுத் தலைவராக இருந்த ஜோர்ஜ் புஷ்ஷினால் நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அப்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா செயற்படுத்தினார். இதனை இலங்கையும் மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் விற்பனையாளர்களை ஒழிக்க சிங்கப்பூரிலுள்ள சட்டங்கள், இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். - என அவர் குறிப்பிட்டார்.

## கோழி இறைச்சி விலை அதிகரிக்கும் சாத்தியம்



பண்டிகை காலத்திற்குப் பின்னர் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கும் என அகில இலங்கை கோழி வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக வர்த்தக அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட அவர், 'ஒப்புக்கொண்டதன்படி, மக்காச்சோளம் உத்தரவாத விலையில் வழங்கப்பட்டால் விலை அதிகரிப்பு இருக்காது' என்றும் கூறினார்.

வர்த்தமானி அறிவிப்பின்படி கோழி இறைச்சியின் விலை பேணப்பட்டு வருவதாகவும், தோல் கொண்ட கோழி இறைச்சி 430 ரூபாவிற்கும், தோல் இல்லாத கோழி இறைச்சி 500 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கோழி இறைச்சியின் பற்றாக்குறை ஏற்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஏனெனில் மக்காச்சோளம் பற்றாக்குறை நிலவுகின்றது. அதன் விலையும் அதிகரித்துச் செல்கின்றது.

இந்நிலையில், கோழி இறைச்சியின் நிலையான விலையை பராமரிக்க, கோழிப்பண்ணையாளர்களுக்கு மக்காச்சோளத்தை 60 ரூபாவிற்கு வழங்குமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## போதைப்பொருளுடன் யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் பொம்மைவெளியைச் சேர்ந்த ஆணொருவர்,(வயது - 35) ஒரு கிலோ 750 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று பொம்மைவெளி 8 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பெண்ணொருவர் (வயது - 33), 5 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடனும் 80 ஆயிரம் ரூபா பணத்துடனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையை, யாழில் பல்வேறு இடங்களில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டது.

இதன்போதே குறித்த இரு சந்தேகநபர்களையும் கைது செய்து, மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்ற பொலிஸார், யாழ். நீதிமன்றத்தில் அவர்களை முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் அரசின் அனுமதியின்றி நாடுதிரும்பலாம்

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் அரசாங்கத்திடம் அனுமதிப் பெறத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெளிநாட்டிலிருக்கும் இலங்கையர்கள் நாட்டுக்கு மீள வருவதற்கு வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் 10 ஆம் திகதி கிடைக்கும்

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இம்மாதம் 10 ஆம் திகதி 1,000 ரூபா நாள் சம்பளம் என்ற அடிப்படையில் முழுமையான சம்பளம் கிடைக்கப் பெறும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினமான மார்ச் 5 ஆம் திகதியிலிருந்து 1,000 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

வேலை நாள்கள் 13 ஆகக் குறைக்கப்படும் என்று முதலாளிமார் சம்மேளனம் கூறவில்லை. கூட்டு ஒப்பந்த நடைமுறையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை மாத்திரமே கம்பனிகள் கூறியிருந்தன.

இவ்வாறான கருத்துக்கள் எதிர்த் தரப்பினரால் வெளியிடப்பட்டவையாகும் என்றும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா நாள் சம்பளம் வழங்குமாறு குறிப்பிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கம்பனிகள் நீதிமன்றத்தில் அவர்களது வாதத்தை முன்வைத்திருந்தனர். எனும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு வழங்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதற்கமைய வர்த்தமானி வெளியிடப்பட்ட தினமான மார்ச் 5 ஆம் திகதி முதல் 1,000 ரூபா நாள் சம்பளத்தை கம்பனிகள் நிச்சயம் வழங்க வேண்டும். எனவே மார்ச் 5 ஆம் திகதி முதல் 1,000 ரூபா நாள் சம்பளம் என்ற அடிப்படையில் இம்மாதம் 10 ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு முழுமையான சம்பளம் கிடைக்கப்பெறும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத்தோடு பல தரப்பினரால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு எம்மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் மக்கள் எம்மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். எனவே புத்தாண்டின் போது பெருந்தோட்ட மக்களுக்கு 1,000 ரூபா சம்பளம் நிச்சயம் கிடைக்கப் பெறும்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பெருந்தோட்ட கம்பனியொன்று வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளமைக்கமைய 1,000 ரூபா நாளாந்த சம்பளம் என்ற அடிப்படையில் 21 நாள்கள் முழுமையான சம்பளத்தை வழங்கியுள்ளது. அதே போன்று பிறிதொரு கம்பனி 17 நாள்களுக்கான சம்பளத்தை வழங்கியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்கினால் 13 நாள்கள் மாத்திரமே வேலை வழங்கப்படும் என்று முதலாளிமார் சம்மேளனம் கூறவில்லை. எதிர்த்தரப்பினரே அவ்வாறானதொரு விடயத்தைக் கூறியுள்ளனர். கூட்டு ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற சில நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையே முதலாளிமார் சம்மேளனம் குறிப்பிட்டிருந்தது.

அதனை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். எனவே புதிய நடைமுறைகளை நாம் வரவேற்கின்றோம். அதற்காக வேலை நாள்களைக் குறைப்பதாகக் கூறினால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. கூட்டு ஒப்பந்தத்தை புதுப்பிப்பது தொடர்பில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடும் சிறந்த முறையில் நிறைவடையும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, நாம் அமைச்சைப் பொறுப்பேற்ற போது புதிய வீட்டுத்திட்டம் எதுவும் காணப்படவில்லை. ஏற்கனவே திட்டமிடப்பட்ட வீடமைப்புத் திட்டமே காணப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 4 ஆயிரம் வீட்டுத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. எனினும் கடந்த அரசாங்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட வீடுகளும் முழுமைப்படுத்தப்படாமல் உள்ளன.

எனவே தற்போது கடந்த அரசாங்கத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள வீடுகளை முழுமைப்படுத்த எமது அமைச்சினூடாக 52.2 கோடி நிதி ஆரம்பகட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மேலும் 105.7 கோடி மில்லியன் நிதி தேவையாகவுள்ளது.

அந்த தொகை கிடைக்கப் பெற்றவுடன் அடுத்தகட்ட பணிகள் ஆரம்பிக்கப்படும். இதே போன்று தேசிய வீடமைப்புத் திட்டத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள வீட்டு நிர்மாணப்பணிகளும் கட்டம் கட்டமாக நிறைவு செய்யப்படும்.

வீடுகளை நிர்மாணிப்பது மாத்திரமே அபிவிருத்தி அல்ல. மலையகத்துக்கான பல்கலைக்கழகம் தொடர்பில் பலரும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். எனினும் நாமே அதனை நடைமுறையில் சாத்தியமாக்கியுள்ளோம். மலையகப் பல்கலைக்கழக நிர்மாணப்பணிகள் எப்போது நிர்மாணிக்கப்படும் என்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெகு விரைவில் வெளியிடப்படும்.

இப்பல்கலைக்கழகத்துக்காக கற்கை நெறிகள் தொடர்பான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய விடயங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் பல்கலைக்கழகம் ஒன்றை ஒரு வருடத்திற்குள் நிர்மாணிக்க முடியாது. எனினும் அதற்கான சகல முன்னெடுப்புக்களும் நிறைவடைந்துள்ளன. கட்டுமானப்பணிகள் மாத்திரமே எஞ்சியுள்ளன. அவையும் விரைவில் ஆரம்பிக்கப்படும். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir




மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# ஆரோக்கியமே ஆனந்த வாழ்வு!

உடல்நலம், மனநலம், சமூகநலன் சிறப்பாய் இருந்தால் ஆரோக்கியம் என்பது அழகாக மலர்ந்துவிடும். ஆரோக்கியம் காத்திட வேண்டும் என்பதுதான் உலக சுகாதார அமைப்பினது முக்கிய நோக்கமாகும். ஆரோக்கியம் என்பது தான் உலகத்தின் அத்திவாரம் ஆகும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அந்த நோயற்ற வாழ்வை வாழ் கிறோமா என்பதுதான் பெருங் கேள்வியாய்த் தொக்கி நிற்கிறது. நோயற்ற சமூகம் என்பது உலகம் முழுவதும் வரவேண்டும் என்பது உலக சுகாதார அமைப்பின் தலையாய நோக்கம். அதற்காக உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு காலகட்டத்திலும் எவை, எவை முக்கியத்துவத்துக்கு உட்படுத்தப் பட வேண்டுமே அவையனைத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முயன்று வருகிறது.

உலகில் எந்தக் கோடியில் மக்கள் வாழ்ந்தாலும் - அவர்கள் எந்த இனமாக, எந்த மதமாக, எந்த கலாசாரம், பண்பாடுகளை உடையவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் உலகப் பந்திலே உலக மக்கள்என்னும்வடத்துக்குள்ளேதான்வருகிறார்கள். நிறத்தால், உருவத்தால் வேறு பட்டாலும் அவர்கள் அனைவருக்கும் உடலும் இருக்கிறது. அந்த உடலை இயக்க உயிரும் இருக்கிறது. அதனால் அவர்கள் அனைவரும் நலத்துடன் வாழ்ந்தால் உலகமே நலமாக இருக்கும் என்பதுதான் முக்கியம். இக்கருத்தை மூலமாக்கியே உலக சுகாதார அமைப்பு உலக சுகாதாரத்தை மையமாக்கி உலகசுகாதார தினத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

உலகத்தின் நல் வாழ்வுக்கான மன்றத்தின் கூட்டம் 1948 ஆம் ஆண்டில் இடம் பெற்றது. அந்தக்



கூட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் வரும் 7 ஆம்திகதியை உலகத்தின் சுகாதாரத்துக்கான தினமாக - அதாவது நலவாழ்வு தினமாக - கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அப்போது இருந்து வருடந்தோறும் அக்காலத்தில் உலகுக்கு என்னவகையான சுகாதார நலன் அவசியமோ அதனை மையப்படுத்தி உலகுக்கு விழிப்புணர்வு - அதாவது உலகமக்கள் மத்தியில் நல்லதோர் விழிப்புணர்வை நலன் காக்கும் வகையில் - ஏற்படுத்தி வருகிறது என்பதை நாமனைவரும் விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும்.

நலவாழ்வு என்னும் பொழுது அதில் பல விடயங்கள் பொதிந்து கிடக்கின்றன. உடல் நலம், உளநலம், சுற்றுச்சூழல் நலன், இவை அனைத்தையும் அடக்கியதாய் விரிவடையும் சமூகநலன். இவ்வாறு விரிவடையும் நலன் பல சவால்களுக்கு உட்படுவதும் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. சவாலே சமாளி என்பதையும் உலக சுகாதார அமைப்பு மிகவும் கவனத்தில் கொண்டுதான் தனது செயற்பாடுகளை ஆற்றி வருகிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

நாளும் பொழுதும் உலகில் பலவிதமான நோய்கள் வந்தபடியே இருக்கின்றன. இந்த நோய்கள் நாடுகளின் தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்பக் கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. தாக்கத்தையும் ஏற்படுத்தியே வருகின்றன. ஆனால் கூடவோ குறையவோ மக்கள் உலகில் இப்படியான நோய்களினால் துன்பப்படுகிறார்கள் என்பதுமட்டும் உண்மையேயாகும்.

அம்மை நோய், காசநோய், தொழுநோய், பாலியல் நோய், மனநோய், இதயநோய், சர்க்கரைநோய், மறதிஎன்னும்நோய், டெங்கு நோய், சிக்குன்குனியா நோய், செங்கமாரி நோய், வாந்திபேதி நோய், புற்று நோய், தற்போது கொரோனா என்னும் கொடிய நோய் - இப்படி நோய்களின் வருகை காலத்துக்குக் காலம் உலகை உலுக்கியபடியே இருக்கிறது. பல உயிர்களைப் பலி எடுத்த படியே இருக்கிறது. இப்படி நோய்கள் வருகின்ற வேளை உலக சுகாதார அமைப்புக்கு வேலைப்பழு கூடிவிடுகிறது.

இப்படியான காலங்களில் இந்த நோய்கள் தொடர்பாக உலகமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நாடுகளுக்கிடையே ஆலோசனைகளை வழங்கவும், விஞ்ஞானிகளை, ஆராய்ச்சியாளர்களை நோய்களுக்கான மருந்துகளைக் கண்டுபிடிக்க ஊக்கப்படுத்தவும் உலக சுகாதார அமைப்பானது முன்னிற்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

உலகில் இருக்கின்ற மக்கள் அனைவருமே நலமான வாழ்வினை வாழவேண்டும் என்னும் கருத்தானது மிகவும் முக்கியமானதாகும். அந்தக் கருத்தினை வலியுறுத்தும் அமைப்பாக உலக சுகாதார ஸ்தாபனம் விளங்குகின்றது என்பது உண்மையாக இருந்தாலும் - அந்த எண்ணக் கருவானது உலக மக்கள் அனைவரதும் உள்ளத்திலும் பதிந்தால்தான் உலகம், நலமான பூகோளமாக அமையும்.

அமைப்பின் நோக்கம் சரியாக உயர்வாக இருந்தாலும் - அந்த நோக்கம் நிறைவேற உலக மக்களின் மனங்கள் திருந்த வேண்டும். சுகாதாரம் என்பது வீட்டிலிருந்தே ஆரம்பமாகிறது. தனி மனித சுகாதாரம் குடும்பத்துக்கு ஆதாரம் ஆகிறது. வீட்டின் சுகாதாரம் கிராமத்தின் சுகாதாரம் ஆகிறது. கிராமத்தின் சுகாதாரம் நகரத்தின் சுகாதாரம் ஆகிறது. நகரங்களின் சுகாதாரம் நாட்டின் சுகாதாரம் ஆகிறது. நாடுகளின் சுகாதாரம் உலகத்தின் சுகாதாரமாக விரிவடைகிறது. இதனையே உலக சுகாதார அமைப்பு விரும்புகிறது. இதனை உலகின் ஒவ்வொரு மூலையிலும் இருக்கின்ற மக்கள் உணர்ந்தால் அதுதான் சுகாதாரத்தின் வெற்றி.

வெள்ளப் பெருக்கால், போரினால், தொழிற்சாலைகளின் பெருக்கத்தால், நீரில் ஆராய்ச்சி, நிலத்தில் ஆராய்ச்சி, நீண்ட வானில் ஆராய்ச்சி, மலையில் ஆராய்ச்சி, மடுவில் ஆராய்ச்சி என்று ஆராய்ச்சிகள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்தப்படும் பலவிதமான இரசாயனங்கள் பலவற்றால் ஏற்படும் தாக்கங்கள் விதம் விதமான நோய்களுக்கு வடிகாலாய் இருப்பதையும் கண்டு கொள்ள முடிகிறது. ஒருபக்கம் நவீனத்தின் பெருக்கம். அதனால் நவீனமான நோய்களின் அணி வகுப்பு. விந்தைகளுக்கு வித்துத்தான் விஞ்ஞானம். ஆனால் விபரீதங்களுக்கும் அல்லவா அது வித்தாகி விருட்சமாய் விரிகிறதே!

ஆனந்தமாய் வாழவே அனைவரும் விரும்புகிறோம். அதேவேளை ஆடம்பரம்தான் ஆனந்தம் என்னும் கருத்தும் பரவி இருப்பதையும் காண முடிகிறது. ஆனந்தம் என்னும் நிலை எப்பொழுது ஏற்படுகிறதென்றால் எல்லா நலன்களும் அமையும் பொழுதான் என்பதை மட்டும் மறந்து விடுகிறோம்.

எல்லா நலன்களும் அமைதல் வேண்டும் என்பதுதான் உலக சுகாதார அமைப்பின் தலையாய நோக்கமாகும். அது கிடைக்கிறதா என்பதுதான் பெரும் சாவாலாய் இருக்கிறது.

சுத்தம் சுகம் தரும், கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி, அமுதமேயானாலும் அளவோடு உண்ணு, அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு, பசிக்கும் முன்னே புசிக்காதே, கண்டதை எல்லாம் உண்ணாதே, உண்டியைச் சுருக்கு உடலைப் பேணு, வண்டி பெருத்தால் வந்திடும் வியாதி, சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் - இவையெல்லாம் சுகாதாரத்தை வலியுறுத்தும் பொன்னான வாக்கியங்கள். தமிழில் இப்பொன்னான வாக்கியங்கள் இருப்பதுபோல மற்றைய உலக மொழிகளிலும் இப்படியான கருத்துடை வாக்கியங்கள் நிறையவே இருக்கின்றன.

(11ஆம் பக்கம் பார்க்க)



## பக்குவம் பேணி பருகுவோம் சுகத்தை!

உடல்நலம் ஓம்பினால் உளநலன் பெறலாம்
உடல்நலம் ஓம்பினால் உவப்புடன் வாழலாம்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் இருப்பதால்
உடம்பினை ஓம்புதல் உயர்வினை அளிக்கும்!

உள்ளம் இருப்பதால் உடல்நலம் பேணு
உன்னை இயக்க உடல்நலம் தேவை
நம்மைப் படைத்தவன் உள்ளம் இருப்பான்
நலமாய் உடம்பை பார்த்திடல் பொறுப்பே!

சுத்தம் என்பதை நித்தம் பேணு
தொற்று வியாதி கிட்டவும் வாரா
கையைக் கழுவு மெய்யைக் கழுவு
காலம் முழுவது காத்திடு நலனை!

மனதைக் காத்தால் மருந்தும் வேண்டா
மருத்துவம் என்பது வாழ்வின் துணையே
விருந்தாய் மருந்தை கொண்டுமே இருந்தால்
விட்டுமே அகலும் விரட்டிடும் வியாதி!

மனநலம் என்பது மனிதர்க்கு முக்கியம்
கணநேர ஆசை கஷ்டத்தைக் கொடுக்கும்
மனமதை அடக்கினால் மார்க்கம் கிடைக்கும்
உடல்நலம் பேண மனமதை அடக்கு!

பேயாய் நோய்கள் பெருகியே இருக்கு
வாயைக் கட்டு வயிற்றைக் கட்டு
பயிற்சியால் உடம்பை பக்குவப் படுத்து
யோகம் கற்றால் யோகம் கிடைக்கும்!

நோயற்ற வாழ்வு சீருடை வாழ்வு
நோயற்ற வாழ்வு சிறப்புடை வாழ்வு
பாயிலே படுக்க புறப்பட வேண்டாம்
பக்குவம் பேணி பருகுவோம் சுகத்தை!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயரின் கருத்தால் கவலையில் மைத்திரி



பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தன்னைப் பற்றித் தெரிவித்துள்ள விடயங்கள் கவலையளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை நாவல பிரதேசத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிர்வாக சேவையாளர் சங்கம் கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது.

கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பேராயரின் கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டபோதே, 'பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை என்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் கவலையளிக்கின்றன.' என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சட்ட மூலமே இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னரே அது தொடர்பாகத் தீர்மானிக்க முடியும். அது தொடர்பில் இதுவரையில் எவ்வித கலந்துரையாடல்களை யும் நாம் முன்னெடுக்கவில்லை. - என்றார்.

பேராயரின் கருத்து தொடர்பில் சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவிக்கையில் -

முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கும் தெரிவாகிவிட்டார்.

தேர்தல் நிறைவடைந்துவிட்டது. மீண்டும் அவர் தேர்த லில் போட்டியிடப்போவதில்லை. எனவே இதனை தவறாக புரிந்து கொள்ளுகின்றனர் என்றே நான் எண்ணுகிறேன்.

அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் எந்தவோர் இடத்திலும் அவர் குற்றவாளியாகக் குறிப்பிடப்படவில்லை.

அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இடமளிக்குமாறு தான் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. - என்றார்.

# கடன் வரம்பை ஒருபோதும் அரசாங்கம் மீறவில்லை

## அஜித் நிவாட் கப்ரால்

2020 ஆம் ஆண்டில் அரசாங்கம் கடன் வரம்பை ஒருபோதும் மீறவில்லை என மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அரசமைப்பு மற்றும் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப செயற்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 2020 ஆம் ஆண்டில், நாட்டில் எழுந்த நிலைமைக்கு ஏற்ப ஜனாதிபதி அரசமைப்பின் படியே செயற்பட்டார் எனவும் அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் காணப்படுகின்ற நிலையில், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் அஜித் நிவாட் கப்ரால் எதிர்க்கட்சியைக் கேட்டுக் கொண்டார்.

# பொறுப்பற்றவர்களாக மக்கள் இருக்கக்கூடாது

## அமைச்சர் கெஹலிய அட்வைஸ்



புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கக்கூடாது என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் பொலிஸாரும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கமும் இணைந்து சிறிய அளவிலான விழாக்களை நடத்த அனுமதித்துள்ளன என்றும் கூறினார்.

இருப்பினும் கொரோனா தொற்றின் மூன்றாவது அலை தொடர்பான அச்சுறுத்தல் இருப்பதால், சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பொது மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை இதுபோன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்னர் சுகாதார அதிகாரிகளிடமிருந்து பொருத்தமான அனுமதியைப் பெற வேண்டும் என்றும் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

# புற்றுநோய் மூலக்கூறடங்கிய தேங்காய் எண்ணெய் எங்கே?

## எதிர்க்கட்சி கேள்வி




இறக்குமதி செய்யப்பட்டுள்ள புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெயை மீள ஏற்றுமதி செய்யாமல் சுங்க திணைக்களம் எதற்காக களஞ்சியப்படுத்தி வைத்துள்ளது ? யாருடைய உத்தரவிற்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் றோஹினி கவிரத்ன கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

இறக்குமதி செய்யப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய எண்ணெய் ஏன் இன்னும் மீள ஏற்றுமதி செய்யப்படாமல் சுங்க திணைக்களத்தினரால் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். யாருடைய உத்தரவிற்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது ?

எனினும் இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனம் பொறுப்பற்றவகையில் கருத்துக்களை தெரிவித்துள்ளது.

அவ்வாறு பொறுப்பிலிருந்து விலக இடமளிக்க முடியாது. அத்தோடு இந்த சர்ச்சைக்குரிய எண்ணெய் சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளனவா இல்லையா என்பதும் தெளிவாகக் கூறப்படவில்லை. அவ்வாறு விநியோகிக்கப்பட்டிருந்தால் எந்த பெயரைக் கொண்டுள்ளது என்பதை தெரிவிக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க இதேபோன்று விஷத் தன்மையுடைய உணவுப் பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், எனினும் குறித்த நிறுவனங்கள் வீழ்ச்சியடையும் என்பதால் அதனை வெளிப்படுத்த முடியாது என்று இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தர நிர்ணய கட்டளை நிறுவனம் மக்களை பாதுகாப்பதற்காகவா அல்லது இறக்குமதி நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காகவா உள்ளது? இவ்வாறான விடயங்களில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

# தேங்காய் எண்ணெயின் ஆறு கொள்கலன்கள் நேற்று மீண்டும் திருப்பியனுப்பப்பட்டுள்ளன

நுகர்வுக்கு பொருத்தமற்ற தேங்காய் எண்ணெயின் ஆறு கொள்கலன்களை நேற்று (செவ்வாய்க்கிழமை) மீண்டும் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது, தேங்காய் எண்ணெய் கொள்கலன்கள் சுங்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன என சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த கொள்கலன்கள் நேற்று இலங்கை துறைமுக அதிகார சபை முனையத்திற்கு மாற்றப்பட்டு அனுப்பப்பட்டன என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட 13 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களில் எப்லடொக்சின் என்ற பதார்த்தம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. அத்துடன், ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாம் எண்ணெய்க் கொள்கலன்களை விடுவிக்க வேண்டாம் என சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிக்க ஏற்பாடு

நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன்படி, புதுவருடத்தின் பின்னர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுகாதார ஆலோசனைக்கு அமைய கோவையொன்றை பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் தற்போது பரீட்சைகளை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து, பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# தினம் ஒரு விவசாயத் தகவல்

டிராகன் ஒரு பழமாகவும் அலங்கார செடியாகவும் முக்கியமானது. பழுத்த பழங்களை நேரடியாக உட்கொள்ள பயன்படுத்தலாம். ஜாம் ஐஸ்கிரீம், ஜெல்லி பழச்சாறு மற்றும் ஒயின் தயாரிக்கவும் இதைப் பயன்படுத்தலாம். டிராகன் பழ மொட்டுகளை கறியாக தயாரிக்கலாம்.

டிராகன் பழம் உணவுகளின் ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. மேலும் இது புற்றுநோய், நீரிழிவு நோயாளிகள், உயர் கொழுப்பு மற்றும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது.

பழத்தில் காணப்படும் ஊட்டச்சத்து - பழுத்த 100 கிராம் டிராகன் பழத்தில் காணப்படும் வழக்கமான ஊட்டச்சத்துகளின் மதிப்பு பின்வருமாறு

| | |
|---|---|
| நீரினளவு | 82.5 - 83 கிராம் |
| புரதம் | 0.159 - 0.229 கிராம் |
| கொழுப்பு | 0.21 - 0.61 கிராம் |
| ஃபைபர் | 0.7 - 0.9 கிராம் |
| கரோட்டின் | 0.005 - 0.012 மி.கி. |



| | |
|---|---|
| விற்றமின் பி 3 | 0.297 - 0.43 மி.கி. |
| விற்றமின் சி | 8.0 - 9.0 மி.கி. |
| தியாமின் | 0.28 - 0.30 மி.கி. |
| ரிபோஃப்ளேவின் | 0.043 - 0.044 மி.கி. |
| நியாசின் | 1.297 - 1.30 மி.கி. |
| கல்சியம் | 6.3 - 8.8 மி.கி. |
| பாஸ்பரஸ் | 30.2 - 36.1 மி.கி. |
| இரும்பு | 0.55 - 0.65 மி.கி. |
| விற்றமின் பி 1 | 0.28 - 0.043 மி.கி. |
| விற்றமின் பி 2 | 0.043 - 0.045 மி.கி. |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள்: தெரிவுக்குழுவுக்குப் பிரேரணை

## சபையில் சமர்ப்பித்தார் தினேஷ்



இலங்கையின் தேர்தல் சட்டம் மற்றும் தேர்தல் முறைமையில் ஏற்படுத்த வேண்டிய திருத்தங்களை ஆராய்ந்து, பரிந்துரைகளை முன்வைப்பதற்கான தெரிவுக்குழு அமைப்பதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தன இந்த தப் பிரேரணையை இன்று முன்வைத்துள்ளார். பிரேரணையின்படி, தெரிவுக்குழுவுக்கு 15 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

குறித்த குழு 6 மாதங்களில் சபாநாயகருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போதுள்ள தேர்தல் சட்டம், தேர்தல் முறைமையின் குறைபாடுகளை அடையாளம் கண்டு, திருத்தங்களைப் பரிந்துரைப்பதே தெரிவுக் குழுவின் பணியாகும்.

தேர்தல் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பான நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் துறைசார் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும் தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

# விசேட பொருளாதார மத்திய நிலையங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்க முடிவு

(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையங்களை விரைவில் திறந்து வைக்க அரசு தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் பொருளாதார மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அவற்றின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ நிதியத்தை நிறுவுவதற்கும், முறையான பொறிமுறையைப் பின்பற்றி அங்கு வியாபார அலகுகளை ஒதுக்கி வழங்குவதற்கும் கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாயிகளின் உற்பத்திகளை நேரடியாகச் சந்தைப்படுத்துவதற்கும், போட்டித் தன்மை



மூலம் மிகவும் வினைத்திறனான விலைப்பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமான வகையில் இந்தப் பொருளாதார மத்திய நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக அஸ்கிரிய பீடம் போர்க்கொடி!

கொழும்பு, ஏப்ரல் 06

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அஸ்கிரிய பீடம் அடியோடு நிராகரித்துள்ளது.

ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக கட்சி பேதங்களை மறந்து அனைவரும் அணிதிரள வேண்டும் என்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த முக்கியமான கட்டத்தில் இலங்கையர்கள் அனைவரும் ஒருநாடாக ஐக்கியப்படாவிட்டால், எதிர்ச்சக்திகள் நன்மையடைந்து விடும்.

இலங்கை இராணுவத்தினர் பயங்கர வாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அப்பாவி தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்பதை முழு உலகமும் கண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சார்பான தரப்பினர் முன்வைக்கும் அழுத்தங்களைப் பொருட்படுத்தாமல், இன, மத, கட்சி பேதம் கடந்து இலங்கையர்கள் ஒன்றுபட வேண்டும். - என்றார்.

கேம் விளையாடத் தொலைபேசி தரவில்லை:

# பாடசாலை மாணவன் தூக்கிட்டு தற்கொலை

கைத்தொலைபேசியில் தொடர்ச்சியாக ஒன்லைன் விளையாட்டில் ஈடுபட்டு வந்த பாடசாலை மாணவன் ஒருவன் தாயார் கைத்தொலைபேசியைப் பறித்தமையால் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம், சுழிபுரம் - பிளவத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக் குட்பட்ட பண்ணாகம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் தரம் 09இல் கல்வி கற்கும் 14 வயதான மாணவனே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகக் கைத்தொலைபேசியில் விளையாட்டில் ஈடுபட்டு வந்தமையால் மாணவனின் தாயார் கைத்தொலைபேசியைப் பறித்து வைத்துள்ளார். அதனைப் பொறுக்க முடியாத மாணவன் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலைச் சிறையில் 21 கைதிகளுக்குத் தொற்று

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலை கைதிகள் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதாக திருகோணமலை பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக சிறைக்கைதிகள் ஐவருக்கு, கடந்த வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் மேற்படி அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில், கடந்த மூன்று தினங்களில் திருகோணமலை விளக்க மறியல் சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 21 பேர் உறுதி செய்யப்பட்டுள்ளனர் என திருகோணமலை பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கோதுமை ஆலை ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என அன்டிஜன் பரிசோதனையில் உறுதியாகியுள்ளதாக உப்பு வெளி பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்

# பிரதான சூத்திரதாரிகள் சிறையில் உள்ளனராம்!

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளான இருவர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது சிறையிலுள்ள மௌலவி மொஹமட் இப்ராஹிம் முகமது நௌபர் மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகிய இருவருமே பிரதான சூத்திரதாரிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் எனவும் அவர் கூறினார்.

உயித்த ஞாயிறு தாக்குதலாளிகளின் பிரதான சூத்திரதாரிகளை கண்டறியுமாறு அரசுக்கு எதிர்க்கட்சிகள் கடும் அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் நேற்று (செவ்வாய்) மாலை கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை மறைக்க வேண்டிய தேவை எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை எனவும் அவர் கூறினார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் அபுபக்கர் அல் - பாக்தாதியின் சித்தாந்தங்களை மௌலவி மொஹமட் இப்ராஹிம் முகமது நௌபர் 2014 - ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஊக்குவித்து வந்தார்.

தேசிய தௌஹீத் ஜமாத்தலைவரான சஹ்ரான் ஹாசிமை மூளைச் சலவை செய்து தற்கொலை குண்டுதாரிகளின் தலைவராக இவர்தான் மாற்றினார் எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது!

## பேராயரின் கருத்துக்கு பீரிஸ் பதில்




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எந்தவொரு நபரையும் பாதுகாக்கவேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் சட்டமா அதிபரே தீர்மானம் எடுப்பார்.

- இவ்வாறு கல்வி அமைச்சரும் சட்டத்துறை நிபுணருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். எனவே, அவருக்கு எதிராக உடனடியாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நபரொருவர் தொடர்பில் சாட்சியங்களின் அடிப்படையில்தான் வழக்குத் தாக்கல் செய்யப்படும். வழக்குத் தொடுப்பதா? இல்லையா? என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களமே தீர்மானம் எடுக்கும். இதுதான் நெறிமுறை.

கடந்த ஆட்சியின்போது இந்தக் கோட்பாடு மீறப்பட்டது. அலரிமாளிகையில் இருந்து தீர்மானங்கள் எடுக்கப் பட்டன. இதனால்தான் குழப்பமான நிலைகூட உருவானது.

அரசியல் காரணங்களின் அடிப்படையில் அல்ல சாட்சியங்களின் அடிப்படையிலேயே சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. அதேபோல் எவரையும் பிரச்சி னைகளுக்குள் சிக்கிவிட வேண்டும் என்ற எண்ணமும் எமக்கு இல்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் உரிய வகையில் இடம்பெறுகின்றன. கடந்த சில நாள்களில்கூட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடிக்கும் வெப்பமான காலநிலை 8 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை!

நாட்டின் சில பகுதிகளில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் அதிக வெப்பமான காலநிலை நிலவுகின்றது எனவளிமண்டலவியல்திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் இந்தக் காலநிலை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில், சூரியன் பூமிக்கு நேராக உச்சம் கொடுப்பதே இந்த கடும் வெப்பமான காலநிலைக்கு காரணமாகும் எனத் தெரிவித்துள்ள அவர், எனினும் இது தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், புத்தளம், குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அதிக வெப்பமான காலநிலை நிலவக்கூடுமென அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிக வெப்பத்தால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளைப் பொதுமக்கள் எடுக்க வேண்டும் என அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, தேவைக்கேற்றளவு நீர் அருந்துதல், முடிந்த வரை நிழல் தரக்கூடிய இடங்களில் இருத்தல் போன்ற விடயங்களை கையாள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வயோதிபர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ளவர்கள் இது தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இலங்கையின் செயற்பாட்டுக்கு சர்வதேச சமூகம் பாராட்டுக்கள்

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் இலங்கையின் செயற்பாடு குறித்து சர்வதேச சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் நாட்டில் கர்ப்பிணி தாய்மார்களின் மரணங்கள் அதிகரித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், சுகாதார அமைச்சுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும் என தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் சவாலான காலப்பகுதியில் தாய் – சேய் சுகாதார சேவைகளை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் தாய் – சேய் சுகாதார சேவையில் இடம் பெறும் பாதகமான விளைவுகளை தடுக்க இலங்கை மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை அரசு மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டத்துக் டாக்டர் மொஹமட் கைருதீன் அமன் ரசாலி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 இலட்சம் டன் பாம் எண்ணெய்யை இறக்குமதி செய்கின்றது. இதில் பெரும் பங்கு இந்தோனேசியா மற்றும் மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்தநிலையில், பாம் எண்ணெய் வகைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதை உடன் அமுலுக்கு வரும் வகையில், நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அத்தோடு, முள்ளு தேங்காய் செய்கைக்கும் முழுமையாக தடை விதிப்பதுடன், ஒரு தடவைக்கு 10 சதவீதம் என்ற வகையில் முள்ளு தேங்காய் செய்கையை முழுமையாக அகற்றி, அதற்குப் பதிலாக இறப்பர் அல்லது சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமான ஒரு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பையடுத்து மலேசியாவின் அமைச்சர் உள்ளூர் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உலகில் ஏழு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள நிலையில், உலகளவில் எங்கள் பாம் எண்ணெய் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எமது பாம் எண்ணெய்யைக் கொள்வனவு செய்ய ஒரு தரப்பினர் ஆர்வம் காட்டவில்லை என்றாலும், இன்னும் பலர் ஆர்வமாக உள்ளனர். மிக முக்கியமாக நாட்டின் பாம் எண்ணெய்யில் உற்பத்தியில் சிறந்த தரத்தை நாங்கள் தருகின்றோம்.

மலேசிய பாம் எண்ணெய் 90 சதவீத தரம் வாய்ந்தது எனச் சான்றிதழைப் பெற்றிருப்பதால் இலங்கை அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் பாகுபாடு கொண்டதாக நாம் உணர்கின்றோம்.

வெளிநாடுகளில் பாம் எண்ணெய்யைச் சந்தைப்படுத்துவதற்கான எமது நாட்டின் உரிமை சர்ச்சைக்குரியதாக இருக்கக்கூடாது என்பதற்காக மலேசிய அரசிடமிருந்து பாம் எண்ணெய் தொடர்பில் முழுமையான தகவல்களை இலங்கை பெற வேண்டும் – என்றார்

# யாழ் வாள்வெட்டு குழு வவுனியாவில் அடாவடி



யாழில் இருந்து வெள்ளை வானில் வாள்களுடன் வருகை தந்த குழு ஒன்று வவுனியாவில் நேற்றிரவு 7.30 மணியளவில் இரு வீடுகளுக்குள் புகுந்து உடமைகளை சேதப்படுத்தியுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :–

வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு குடியிருக்கும் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தடியைச் சேர்ந்த பெண் ஒருவரை காதலித்துள்ளமையுடன், பெண் வீட்டார் சம்மதமின்றி குறித்த பெண்ணை அழைத்து வந்து பதிவு திருமணமும் செய்துள்ளார்.

இந்நிலையில், யாழில் இருந்து வெள்ளை நிற வான் ஒன்றில் வருகை தந்த குறித்த பெண்ணின் தந்தை, சகோதரி ஆகியோருடன் முகத்தை கறுப்பு துணியால் மறைத்து கட்டியபடி வாள்களுடன் வந்த 10 மேற்பட்ட இளைஞர் குழு பெண்ணை அழைத்து வந்த இளைஞன் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டு உரிமையாளரின் வீட்டுக் குள் புகுந்து ஜன்னல் கண்ணாடியை உடைத்து குறித்த பெண்ணும், இளைஞனும் எங்கே எனக் கேட்டு வாள் முனையில் அச்சுறுத்தியதாகவும், இதன்போது வீட்டு உரிமையாளரின் மகள் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய போது இளைஞர் ஒருவர் குறித்த பெண்ணின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தினார் எனவும் தமது முறைப்பாட்டில் தெரி வித்துள்ளனர்.

அத்துடன், குறித்த வீட்டு வளவில் அமைந்துள்ள இளைஞன் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டிற்குள்ளும் வாள்களுடன் புகுந்த குறித்த குழுவினர், அந்த இளைஞனும் பெண்ணும் சம்பவ நேரம் அங்கு இல்லாத நிலையில், வீட்டு அறையின் கதவுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளமையுடன், அங்கு இருந்த வீட்டு தளபாடங்களையும் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த இளைஞர் குழு கறுப்பு துணிகளால் முகத்தை மறைத்து கட்டியிருந்ததாகவும், இரு வெள்ளை நிற வான்களில் வந்ததாகவும் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்டோர், குறித்த இளைஞர்கள் யாழில் இருந்து வருகை தந்த ஆவா குழுவா என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 119 பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலமைகளை பார்வையிட்டனர். இது தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தியோகபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்தார்.

சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பான விடயங்கள், அரசியல் தீர்வு, மாகாண சபைத் தேர்தல் , நில அபகரிப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன எனவும், குறித்த சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது எனவும் சுரேந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அரசியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தான் விவாகரத்துப் பெற்ற பெண் கிடையாது என குறிப்பிட்ட அவர், விவாகரத்துப் பெற்ற பெண்கள்கூட இவ்வாறான நிகழ்வில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இது தொடர்பில் தான் குரல் எழுப்பவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பு தாமரைத் தடாகம் அரங்கில் திருமதி இலங்கை அழகிப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

திருமதி இலங்கை அழகிப் போட்டியின் வெற்றியாளராக திருமதி புஷ்பிகா டி சில்வா என்பவர் தெரிவு செய்யப்பட்டதை, நிகழ்ச்சித் தொகுப்பாளர் அறிவித்தார். அதையடுத்து, புஷ்பிகா டி சில்வாவுக்கு, திருமதி இலங்கை அழகிப் பட்டத்துக்கான கிரீடம் சூட்டப்பட்டது.

கிரீடம் சூட்டப்பட்டு, ஓரிரு நிமிடங்களில், திருமதி உலக அழகு ராணியான கரோலின் ஜூரி, இந்தக் கிரீடத்தைப் பெறுவதற்கு புஷ்பிகா டி சில்வா தகுதியற்றவர் என அறிவித்தார்.

திருமணமாகி, விவாகரத்தான பெண்ணொருவருக்கு இந்தக் கிரீடத்தை வழங்க முடியாது என கரோலின் ஜூரி, மேடையில் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார்.

இவ்வாறு கரோலின் ஜூரி அறிவித்திருந்த நிலையில், புஷ்பிகா டி சில்வாவுக்கு அணிவிக்கப்பட்ட கிரீடத்தை, கரோலின் ஜூரி மேடையிலேயே மீளப் பெற்றுக்கொண்டார்.

கிரீடத்தை மீளப் பெற்றுக்கொண்ட கரோலின் ஜூரி, அதே மேடையில் இரண்டாவது இடத்தைப் (ஃபர்ஸ்ட் ரன்னர்– அப்) பெற்றவருக்கு அந்தக் கிரீடத்தை அணிவித்திருந்தார். இந்தநிலையில், மேடையில் அமைதியின்மை ஏற்பட்டது. இந்த விவகாரம் பேசு பொருளாகவும் மாறியது.

இந்தநிலையில் குறித்த பட்டம் புஷ்பிகா டி சில்வாவுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

## ஆரோக்கியமே...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாக்கியங்களை எந்த ஒரு சுகாதார அமைப்புமே வெளியிடவில்லை. இவையனைத்தும் காலம் காலமாய் வாழ்வோடு வளர்ந்து வந்த மொழிகள் ஆகும். இதனை வழங்கியவர்கள் அனுபவமிக்க எங்களின் முன்னோர்களே ஆவர். அனுபவமிக்க இப்பொன்மொழிகளை வாழ்விலே அனைவரும் கையாண்டால் ஆரோக்கியம் அனைவரதும் வீட்டுக்கதவை தட்டியபடி இருக்கும் அல்லவா?

பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான். ஆனால் இருக்கும் வரை சிறப்பாய் இருக்கவேண்டும். கிடைத்த வாழ்வை பாழ்படுத்தும் வகையில் வாழ்த்துவிடக் கூடாது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பது வாழ்க்கை அல்ல. வாழ்க்கை என்பது ஒருமுறைதான் வரும். விட்டால் விட்டதுதான். ஆரோக்கியத்தை இழந்தால் அனைத்துமே இழந்ததாகவே ஆகிவிடும்.

மயக்கும் மது வாழ்க்கைக்கு அவசியமா? வண்ண வண்ணச் சுருட்டுகள் வாழ்வினுக்கு தேவையா? விநோதமான போதை மாத்திரைகள், போதை ஊசிகள் நிச்சயம் தேவைதானா? கணநேர இன்பத்தைத்தருகின்ற விபச்சாரம் தேவைதானா? அந்த விபசாரத்தின் விளைவால் வருகின்ற வியாதிகளை நாடுவது வாழ்வினுக்கு அவசியம்தானா? ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டியவை இவை.

ஊரைத்திருத்த முதல் உன்னைத் திருத்து, உலகைத் திருத்த முதல் உன்னையே திருத்து இவையெல்லாம் அறிந்திருந்தும் விட்டில் பூச்சிகளாய் வீழ்ந்து மடிதல் முறைதானா ?

உலக சுகாதார அமைப்பு என்பது ஒரு நல்வழி காட்டுவதற்கு அண்மையில் தோற்றுவிக்கப்பட்டதாகும். ஆனால் எங்களின் முன்னோர்கள் வழங்கி விட்டுச் சென்ற அத்தனை நலன்சார்ந்த விடயங்களுமே மிகப்பெரிய சுகாதார அமைப்பேயாகும். உலக சுகாதார தினமாக ஏப்ரல் ஏழாம் நாளை கொண்டாடி மகிழ்வோம். ஆனால் ஒவ்வொரு நாளையுமே சுகாதாரத்துக்கான நாளாக அனைவருமே எண்ணினால் உலகின் சுகாதாரம் பட்டொளிவீசி சுகாதாரக் கொடி விண்ணினைத் தொட்டு நிற்கும் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பாதுகாப்பு மேற்பார்வைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவர் அமைச்சர் சமல் ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இந்த அறிக்கையை கையளித்துள்ளார்.

இந்தக் குழு 2021 பெப்ரவரி 19 அன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை விரிவாக ஆய்வு செய்த இந்த குழு 78 பரிந்துரைகளை செய்துள்ளது.

அந்த பரிந்துரைகள் எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டும், அவற்றை செயல்படுத்தப்போகும் நிறுவனங்கள் ஆகியவை அறிக்கையில் அடங்கியுள்ளன

# சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு தொகை உயர்வு

சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு தொகை உயர்த்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த தொகை 2 ஆயிரம் ரூபாவிலிருந்து 2 ஆயிரத்து 500 ரூபாவாக உயர்த்தப்பட உள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு நாடாளுமன்றில் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வெகு விரைவில் இந்தக் கொடுப்பனவு தொகை 2 ஆயிரத்து 500 ரூபாவாக உயர்த்தப்படும் என அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டுள்ளார்

## கோரவிபத்தில் தாய், 3 பிள்ளைகள் காயமடைவு

இறக்காமம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தின் சாரதி உட்பட ஓட்டோவில் பயணித்த தாய் மற்றும் மூன்று பிள்ளைகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்ததையடுத்தே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
சமையல் உதவியாளர்கள்.
சுத்திகரிப்பு செய்பவர்கள்.

• ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
• வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
Contact :
021 221 56 56
076 122 15 66
070 330 55 00
பிரான்ஸ், ஜேர்மனி பெல்ஜியம், 1100/= (11 kg க்கு மேல்) டென்மார்க் நெதர்லாந்து
லண்டன் 1000/= (11 kg க்கு மேல்)

1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம், சங்கானை, கல்வியங்காடு, ஆவரங்கால், நெல்லியடி, கைதடி
சங்கத்தானை, பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கனகராயன் குளம்
மல்லாவி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு

# மரண அறிவித்தல்



## திரு.வேலாயுதன் சிவஞானசோதி

B.A(Econ) Hons, MSc(Bradford), U.K
FCMA (London), FCA (Sri Lanka) , Chartered Accountant
முன்னாள் செயலாளர் தேசியக் கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தற்போதைய செயலாளர், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர்

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் 5.4.2021 அன்று மாலை சிவபதம் எய்தினார். இவர் காலம் சென்ற பிரபல சட்டத்தரணி திரு.வேலாயுதன் மற்றும் திருமதி.பொன்னம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரனும், காலம் சென்ற திரு.சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி.குமுதினி அவர்களின் அன்பு மருமகனும், குறமகளின் அன்புக் கணவரும், பிரபல சட்டத்தரணி திரு.தேவசேனாதிபதி மற்றும் தேசிய லொத்தர் சபையின் ஓய்வுபெற்ற பிரதி பொது முகாமையாளர் திரு.சுந்தரேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரனும், கௌரி, சுமதி அவர்களின் மைத்துனரும், மயுரதன் - சிங்கப்பூர், சிவசங்கரன் - கனடா, சிவகாந்தன், வேல்விழி - கனடா அவர்களின் மைத்துனரும் பிரதாப், துஷ்யந்தன், அவர்களின் சித்தப்பாவும் கோகுல், சுபஹரி, சிவராம், அருண்சிவா, அவர்களின் மாமாவும் பிரணவன், பைரவி அவர்களின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் புதன்கிழமை 9.00 - 6.00 மணிவரையும் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை Jayaratna VIP Palour இல் வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி 4.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சுக்களில் - தேசியக் கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றில் செயலாளராகவும் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பொதுச்சேவை ஆணைக்குழவின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார்.

**தகவல் : -**

**குறமகள் (மனைவி) 0779007623**
**தேவசேனாதிபதி (சகோதரன்) 0771133400**
**சுந்தரேஸ்வரன் (சகோதரன்) 0773850841**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் 71.79 சதவீத வாக்குப்பதிவு: 5 மணிக்குப்பிறகு 8.19 சதவீதம் பதிவு





வாக்களிக்க நின்ற வாக்காளர்கள்

தமிழகத்தில் நேற்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், 71.79 சதவீத வாக்குகள் பதிவானதாக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் நேற்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. காலை ஏழு மணி முதல் இரவு ஏழு மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது. தமிழகம் முழுவதுமாக 71.79 சதவீத வாக்குகள் பதிவானதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ அறிவித்துள்ளார்.

முன்னதாக, காலை 9 மணி நிலவரப்படி 13.80% வாக்குகள் பதிவாகியிருந்தது. 11 நிலவரப்படி 26.29% வாக்குகளும், மதியம் 1 மணி நிலவரப்படி 39.61% சதவீதமும், மதியம் 3 மணி நிலவரப்படி 53.35% சதவீதமும், மாலை 5 மணி நிலவரப்படி 63.60 சதவீதமும் பதிவாகின. அதன்பின் மொத்தமாக 71.79 சதவீத வாக்குகள் பதிவானது. ஐந்து மணிக்குப்பிறகு 8.19 சதவீத வாக்குகள் பதிவாகின.

## சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவன் நான்

### விஜய் சேதுபதி தெரிப்பு

கோடம்பாக்கத்தில் வாக்களிக்க வந்த நடிகர் விஜய் சேதுபதி, சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவன் நான் என்று கூறியிருக்கிறார்.

சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. காலை 7 மணி முதல் நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், அஜித், சூர்யா, சிவகுமார், கார்த்தி, விஜய், சிவகார்த்திகே யன் உள்ளிட்ட பலர் வாக்குகளை செலுத்தினார்கள்.

நடிகர் விஜய் சேதுபதி 2 மணியளவில் கோடம்பாக்கத்தில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்குப் போட்டார். அதன்பின் பேசிய விஜய் சேதுபதி, சாதி, மதத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு, மனிதர்கள் தான் முக்கியம்' -என்றார்.






## பி.பி.இ.கிட் உடையுடன் வாக்களித்தார் கனிமொழி



சென்னை, ஏப். 07

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள தி.மு.க., எம்.பி. கனிமொழி, பி.பி.இ.,கிட் உடையணிந்து வந்து நேற்று மாலை வாக்களித்தார்.

நேற்று மாலை 6 மணிக்கு சென்னை மயிலாப்பூரில் உள்ள ஒரு ஓட்டுச்சாவடிக்கு ஆம்புலன்சில் வந்தார் தி.மு.க., எம்.பி. கனிமொழி, அங்கு தனது வாக்கை பதிவு செய்தார். அப்போது பி.பி.இ. கிட் எனப்படும் முழு உடலுக்கான பிரத்தியேக பாதுகாப்பு உபகரணங்களுடன் வந்து வாக்கை செலுத்தினார். வாக்களித்துவிட்டு வெளியே வந்த அவரை செய்தியாளர்கள் பேட்டி காண முயன்றனர்.

எனினும் செய்தியாளர்களிடம் இடது கை விரலில் அடையாள மை இட்டதை காட்டியபடி ஆம்புலன்சில் ஏறி அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார்.

கடந்த சில தினங்களுக்கு முன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த கனிமொழிக்கு கொரோனாத் தொற்று உறுதியானது. இதையடுத்து சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சூழ்நிலையில் அவர் வாக்களிக்க வருவாரா? என கேள்வி எழுந்தது. தகுந்த பாதுகாப்பு உடையணிந்து வந்து வாக்கை பதிவு செய்தார்.



நடிகை த்ரிஷா வாக்களித்தார்



பிக்பாஸ் புகழ் நடிகை ரம்யா குடும்பத்துடன் வாக்களித்தார்



நடிகை ரித்விகா வாக்களித்தார்



நடிகர் சூரி வாக்களித்தார்



நடிகைப்ரியா பவானி சங்கர் வாக்களித்தார்



நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் வாக்களித்தார்





அரைமணி நேரத்திற்கும் மேலாக வரிசையில் நின்று வாக்களித்தார் சீமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த ஊரில் வாக்களித்த முதலமைச்சர் பழனிசாமி



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தனது சொந்த ஊரான சேலம் மாவட்டம் சிலுவம்பாளையத்தில் குடும்பத்தினருடன் சென்று வாக்களித்தார்.

சேலத்தில் தங்கியிருந்த முதலமைச்சர் பழனிசாமி, காலையில் எடப்பாடி அருகே உள்ள அவரது சொந்த ஊரான சிலுவம் பாளையத்திற்கு சென்றார். அங்கு தனது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மற்றும் தமது தாயார் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சிலுவம் பாளையத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தனது மனைவி, மகன் மற்றும் பேரனுடன் நடந்து சென்றார். பொதுமக்களுடன் வரிசையில் நின்று காத்திருந்து முதலமைச்சர் வாக்களித்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, அனைவரும் வாக்களித்து ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# குடும்பத்தோடு காத்திருந்து வாக்களித்த மு.க.ஸ்டாலின்



தி.மு.க. தலைவரும் சென்னை கொளத்தூர் தொகுதி வேட்பாளருமான மு.க.ஸ்டாலின், தனது குடும்பத்தினருடன் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தார். மே 2ஆம் திகதி தேர்தல் முடிவு சிறப்பாகவே இருக்கும் என மு.க.ஸ்டாலின் நம்பிக்கைத் தெரிவித்தார்.

சென்னை கொளத்தூர் தொகுதியில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினும், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினும் போட்டியிடுகின்றனர். இன்று காலையிலேயே மெரினா கடற்கரையில் அமைந்துள்ள, பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் நினைவிடத்தில் மு.க.ஸ்டாலினும் உதயநிதியும் மரியாதை செலுத்தினார்.

பின்னர் மயிலாப்பூர் தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை எஸ்.ஐ.இ.டி கல்லூரியியில் உள்ள வாக்குச்சாவடிக்கு மு.க.ஸ்டாலின், அவரது மனைவி துர்கா ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், அவரது மனைவி கிருத்திகா ஸ்டாலின் ஆகியோர் வந்தனர். பொதுமக்களோடு மக்களாக நீண்ட வரிசையில் காத்திருந்து நால்வரும் தங்களது வாக்கைச் செலுத்தினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மு.க.ஸ்டாலின், மே 2ஆம் திகதி தேர்தல் முடிவு சிறப்பாகவே இருக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

# மனைவியை முதுகில் சுமந்து சென்று வாக்களிக்க வைத்த கணவர் ரங்கசாமி



சென்னை பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி கல்யாணபுரம் சென்னை நடுநிலைப்பள்ளி வாக்குப்பதிவு மையத்தில் 19 வாக்குச்சாவடிகள் உள்ளன. இந்த வாக்குச்சாவடி மையத்துக்கு இரண்டு கால்களையும் இழந்த சுமதி என்ற பெண் தனது கணவர் ராமசாமியோடு மீன்பாடி வண்டியில் வந்தார். வாக்குச்சாவடி மையத்தில் சுமதியை அழைத்துச் செல்ல வீல் சேர் கேட்டகப்பட்ட போது, அந்த மையத்தில் வீல் சேர் இல்லை என தெரிய வந்தது.

19 வாக்குச்சாவடிகள் உள்ள மையத்தில் ஒரு வீல் சேர் கூட இல்லாதது குறித்து தேர்தல் அலுவலர்களிடம் கேட்டபோது உரிய பதில் கிடைக்கவில்லை. இதையடுத்து சுமதியை அவரின் கணவர் ராமசாமி தனது முதுகில் சுமந்து சென்று வாக்களிக்க செய்தார். இந்த காட்சி அங்கிருந்தவர்களை கவலைக்கொள்ள செய்தது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் குடிநீர், கழிவறை வசதி, மாற்றுத்திறனாளிகள் எளிதாக வந்து செல்ல சாய்வு தளம், வீல் சேர் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்ற தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், எந்த வசதியும் இல்லாமல்தான் வாக்குச்சாவடிகள் செயல்படுகின்றனவா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

# புதுவையில் மோட்டார் சைக்கிளில் வந்து வாக்குச்செலுத்திய ரங்கசாமி

புதுவை என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி தட்டாஞ்சாவடி மற்றும் ஏனாம் என இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

ரங்கசாமியின் வீடு திலாசுப்பேட்டையில் உள்ள விநாயகர் கோவில் வீதியில் உள்ளது.

திலாசுபேட்டையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி யில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது. இங்கு வழக்கம் போல் அவரது ராசியான யமகா மோட்டார் சைக்கிளில் என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி வந்தார்.

பின்னர் வாக்குச்சாவடியில் 5 நிமிடங்கள் காத்திருந்தார். அவர் 8.10 மணிக்கு மேல் நல்ல நேரம் என்பதால் வாக்களிக்க காத்திருப்பதாக தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து சுமார் 8.15 மணியளவில் தனது வாக்கை ரங்கசாமி செலுத்திவிட்டு யமாகாவில் மீண்டும் புறப்பட்டார்.



# கோவை தெற்கு தொகுதியில் பணப்பட்டுவாடா என கமல் புகார்



கோவை தெற்குப் தொகுதியில் டோக்கன்கள் மூலம் பணப்பட்டுவாடா நடைபெறுவதாக, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல் ஹாசன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக கோவை மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் புகார் அளித்தபின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், டோக்கன்கள் யார் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்றார்.

முன்னதாக கெம்பட்டி காலனியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குப்பதிவை கமல் பார்வையிட்டார்.

# சர்கார் பட பாணியில் வாக்களித்த வாலிபர்

தமிழக சட்டசபைத் தேர்தல் ஒரே கட்டமாக 234 தொகுதிகளிலும் நேற்றைய தினம் நடைபெற்றது. வாக்காளர்கள் ஆர்வமாக வாக்களித்தனர்.

இந்த நிலையில் திருச்சி திருவெறும்பூர் தொகுதியில் சர்கார் பட பாணியில் 49பி சட்டப்பிரிவை பயன்படுத்திவாலிபர் ஒருவர் வாக்கை பதிவு செய்துள்ளார்.

ரமேஷ் என்ற வாலிபர் திருச்சி திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட மேல கல்கண்டார்கோட்டை பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கை பதிவு செய்ய சென்றார். அப்போது அவரது வாக்கை யாரோ கள்ள வாக்காகச் செலுத்தியது தெரியவந்ததால் ரமேஷ் அதிர்ச்சி அடைந்தார்.

இதையடுத்து வாக்குச்சாவடி அலுவலரிடம் தான் ரமேஷ் என்பதற்கான ஆவணங்களை காண்பித்து, தேர்தல் நடத்தை விதியின் '49 P' சட்டப் பிரிவைப் பயன்படுத்தி தனது வாக்கை செலுத்தியுள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# விஜய் வாக்களிக்க சைக்கிளில் வந்தது ஏன்? மக்கள் தொடர்பு அதிகாரி விளக்கம் அளிப்பு



நடிகர் விஜய், நீலாங்கரையில் உள்ள தனது வீட்டில் இருந்து வாக்குச்சாவடி மையத்திற்கு சைக்கிளில் வந்து வாக்களித்தார்.

சென்னை நீலாங்கரையில் உள்ள தனது வீட்டில் இருந்து, சைக்கிளில் புறப்பட்ட நடிகர் விஜக்கு பாதுகாப்பாக மக்கள் இயக்க நிர்வாகிகள் சிலர் இருசக்கர வாகனங்களில் நெருக்கமாக வந்தனர்.

தனது வீட்டில் இருந்து சுமார் அரை கிலோ மீற்றர் தூரம் சைக்கிளில் பயணித்து, நீலாங்கரை கபாலீஸ்வரர் நகரில் உள்ள வேல்ஸ் இன்டர்நேஷனல் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு விஜய் வந்ததும், அவரைப் பார்த்த ரசிகர்கள் பொலிஸ் அமைத்திருந்த தடுப்புகளையும் மீறி அருகே குழுமினர். பாதுகாப்புக்கு இருந்த பொலிஸார் ரசிகர்களை அப்புறப்படுத்தி, நடிகர் விஜயை உள்ளே அழைத்துச் சென்றனர். அதன் பிறகு தனது வாக்கை நடிகர் விஜய் பதிவு செய்தார்.

நடிகர் விஜய் வாக்குச் செலுத்திவிட்டு திரும்பியபோது ரசிகர்கள் அதிகளவில் முண்டியடித்ததால், பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர்.

வாக்களித்த பிறகு, மீண்டும் தனது வீட்டுக்கு சைக்கிளில் செல்ல நடிகர் விஜய் சென்றார். ஆனால் ரசிகர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததன் காரணமாக அந்த முயற்சியை கைவிட்டு, விஜய் மக்கள் இயக்க நிர்வாகி ஒருவரது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்தபடி நடிகர் விஜய் வீடு திரும்பினார். ரசிகர்கள் முண்டியடித்தபடி செல்பி எடுப்பதற்காக ஓடி வந்ததால், கடும் சிரமத்துக்கு இடையே தடுமாற்றத்துடன் இருசக்கர வாகனத்தை அந்த நிர்வாகி ஓட்டினார்

நடிகர் விஜய் சைக்கிளில் வாக்களிக்க வந்தது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருவதுடன், அது குறித்து பல்வேறு கருத்துகளும் பகிரப்பட்டு வருகின்றன.

பெற்றோல் விலை உயர்வை குறிக்கும் வகையில் நடிகர் விஜய் சைக்கிளில் சென்றிருக்கலாம் என தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

சென்னை ஆயிரம் விளக்கு தொகுதி வேட்பாளர் நடிகை குஷ்பு கூறும்போது நேரத்தை வீணாக்க வேண்டாம் என்பதற்காக விஜய் சைக்கிளில் வந்து வாக்களித்திருக்கலாம் என கூறினார்.

ஒவ்வொருவரும் ஒரு கருத்து சொல்வதால் நடிகர் விஜய் சைக்கிளில் சென்று வாக்களித்ததற்கு எவ்வித அரசியல் காரணங்களும் இல்லை என நடிகர் விஜய்யின் மக்கள் தொடர்பு அதிகாரி ரியாஸ் விளக்கம் அளித்து உள்ளார்.

வாக்குச்சாவடி மையம் மிக அருகில் இருந்ததால் சைக்கிளில் வந்தார் விஜய். நடிகர் விஜய் சைக்கிளில் வந்ததற்கு வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெரியகுளத்தில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் குடும்பத்துடன் வாக்களிப்பு


சென்னை விருகம்பாக்கத்தில் தமிழிசை சவுந்திரராஜன் வாக்களித்தார்


குஷ்பு சுந்தர் வாக்களித்தார்


விருகம்பாக்கம் தொகுதியில் பிரேமலதா விஜயகாந்த் வாக்களித்தார்


சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் ரஜினிகாந்த் வாக்களித்தார்


திரைப்பட நடிகர் சிவகார்த்திகேயன் சென்னையில் வாக்களித்தார்


நடிகர்கள் சூர்யா, கார்த்தி தந்தை சிவகுமாருடன் வாக்கு செலுத்தினர்


மனைவி ஷாலினியுடன் வந்து நடிகர் அஜித் வாக்களித்தார்


சென்னை ஆழ்வார்பேட்டையில் ம.நீ.ம. தலைவர் கமல் வாக்களித்தார்


சிலம்பரசன் (சிம்பு) வாக்களித்தார்


நடிகை நமிதா வாக்களித்தார்


அரை கிலோ மீட்டர் தூரம் நடந்தே வந்து வாக்கு செலுத்தினார் நடிகர் விக்ரம்


நடிகை நிக்கி கல்ராணி சென்னையில் தனது வாக்கினை பதிவு செய்தார்.


விஜய் ரீ.வி குக் வித் கோமாளி புகழ் அஸ்வின் வாக்களித்தார்


நடிகை சிநேகா வாக்களித்தார்


நடிகை வரலட்சுமி வாக்களித்தார்


நடிகை ஆண்ட்ரியா வாக்களித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org